XVC/44



# வ.உ.சி.யும் முதல் தொழிலாளர் வேலைநிறுத்தமும் (1908)

ஆ.சிவசுப்பிரமணியன்

# வ.உ.சி.யும் முதல் தொழிலாளர் வேலைநிறுத்தமும் (1908)

ஆ. சிவசுப்பிரமணியன்

மக்கள் வெளியீடு

மக்கள் வெளியீடு 41
முதல் பதிப்பு அக்டோபர் 1986
உரிமை பதிவு

44703

பதிப்பாசிரியர் டாக்டர் மே. து. ராசு குமார்

மக்கள் வெளியீடு
24 உனிசு அலி சாகிப் தெரு
எல்லிசு சாலை சென்னை 600 002

## காணிக்கை

வ.உ.சி. வேலைநிறுத்தம் நிகழ்த்திய
அதே ஆலையின்
தொழிற்சங்கத் தலைவராய்த் திகழ்ந்து
அவரைப் போன்றே
தன் இளமையெல்லாம்
வெஞ்சிறைக்கீந்து
குன்றா இளமையுள்ளத்துடன்
தத்துவத் தெளிவு
கொள்கைப் பிடிப்பு
செயல்திறன்
கலை இலக்கிய ஞானம்
இத்தனையும் கொண்டவராய்
தமிழகத்து இளைஞர் தம்மை
தன் சொல்லாலும்
பழகுமுறையாலும்
கூர்ந்த மதியாலும்
ஈர்த்து
இன்றும் என்றும் வாழும்
எங்கள் அன்புத் தோழர்

**கே. பாலதண்டாயுதம்**

அவர்களின் நினைவுக்கு.

# பதிப்புரை

தாம் வாழும் காலத்தின் வளர்ச்சிப் போக்குகளைப் புரிந்து கொண்டு, அதற்கேற்பத் தமது பொது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் தலைவர்கள் வரலாற்றில் அருகியே காணப்படுகிறார்கள்.

இத்தகைய சில தலைவர்களில் வ.உ.சி. குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர் என்று துணிந்து கூறமுடியும்.

வணிக நிறுவனமாக உருவாக்கி, தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் கப்பல் செலுத்திய பணியானாலும், இழிவான நிலையில் வைக்கப்பட்டிருந்த தொழிலாளர் களுக்குத் தலைமையேற்று வேலைநிறுத்தம் மேற் கொள்ளச் செய்த பணியானாலும், சுதேசியப் பண்டக சாலை, சுதேசிய நூற்பாலை என்ற பிற முயற்சிகளானா லும் வ. உ. சி. மிகத் தெளிவான நோக்கத்தையும் திட்டத்தையும் கொண்டிருந்தார்.

இந்தப் பணிகள் யாவற்றையும், அன்றைய அரசியல் தேவையாக இருந்த அந்நியராட்சியை அகற்றவேண்டும் என்பதற்காகவே ஒருமுனைப்படுத்தினார்.

அவரது பொது வாழ்வின் தொடக்கமே சுதேசியப் பணிகளுடனும் தொழிலாளர் இயக்கத்துடனும் பின்னிப் பிணைந்து நிற்கிறது.

வ. உ. சி. யின் சிறை வாழ்க்கைக்கு முன்னர் தொடங்கிய அவருடைய தொழிலாளர் இயக்கப் பணி, சிறையிலிருந்து வெளிவந்த பின்னரும் தொடர்ந்தது.

1908 இல் நடத்தப்பட்ட தூத்துக்குடி கோரல் ஆலை வேலைநிறுத்தமும் தொழிலாளர் எழுச்சியும், வ. உ. சி. சிறை சென்ற பிறகு அடக்கப்பட்டுவிட்டது என்பது

மட்டுமல்ல, வேலைநிறுத்தத்தினால் கிடைத்த உரிமைகளும் பறிக்கப்பட்டன.

அமைப்பு அடிப்படையில் தொழிற்சங்கமாக உருப் பெறாததாலேயே தொழிலாளர்கள் போராடிப் பெற்ற உரிமைகளையும் இழந்தார்கள். ஆனால் வ.உ.சி. சிறையிலிருந்து வெளிவந்த பிறகு, தொழிலாளர்களை அமைப்பு அடிப்படையில் ஒன்றிணைத்து, போராட்ட சக்தியாக உருவாக்கப் பெரு முயற்சிகளை எடுத்துக் கொண்டார். அப்பொழுதும்கூட அவர் அரசியல் பொது நோக்கத்தை நிறைவேற்றும் சக்தியாகத் தொழிலாளர்கள் திகழ்வார்கள் என்றே நம்பினார்.

சமூக மாற்றத்துக்கான தலைமைப் பொறுப்பினை ஏற்கும் தகுதியைப் பெற்றிருப்பதாக மதிக்கப்படும் தொழிலாளர் இயக்கம் இன்று பெரும்பாலும் பொருளாதாரப் போராட்டங்களுக்குள் முடக்கப்பட்டுக் கிடக்கிறது. அவ்வப்போது பெறுகின்ற பொருளாதாரச் சலுகைகளும் கூட, வேறுவேறு வழிகளில் விலைமாற்றங்களால் பறிக்கப் பட்டுவிடுகின்றன. அடிப்படை மாற்றங்களை ஏற்படுத் தாமல் பெறுகின்ற எத்தகைய வெற்றியும் வீணாகி விடுவதையே வரலாறு காட்டிக் கொண்டிருக்கிறது.

பணிதொடர்பான சில உரிமைகளுக்காகத் தொடங் கப்பட்ட கோரல் ஆலைத் தொழிலாளர் போராட்டத்தை மக்கள் ஆதரவுபெற்ற அரசியல் இயக்கமாக மாற்றியதும், அதையடுத்து வ.உ.சி. உள்ளிட்ட தலைவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து நடைபெற்ற மக்கள் எழுச்சியின்போது கோரல் ஆலைத் தொழிலாளர்களும் தூத்துக்குடியின் பிற தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் மேற்கொண்டதும் வ.உ.சி.யின் திறமிக்க செயல் திறத்துக் குச் சிறந்த சான்றுகளாக அமைந்திருக்கின்றன.

தொழிலாளர் போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு தக்க துணையாக அமைந்தது போலவேதான், மக்கள் எழுச்சிக்குத் தொழிலாளர்களின் பங்கு அடிப்படை யானதையும் காண்கின்றோம்.

இந்த நிலைதான் மக்கள் இயக்கத்தைக் கட்டுவதற்கு உயிர்ப்பிணைப்பாக இருக்க முடியும்.

தொழிலாளர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க பங்கினை மறுத்து, அவர்களை உற்பத்தி செய்யும் கருவிகளாகவும் அவ்வப்போது சிறு சிறு தேவைகளுக்காகப் போராடுவோராகவும் மட்டும் தனிமைப்படுத்துவது வரலாற்று வளர்ச்சியின் போக்கையே மாற்ற நினைப்பதாகும்.

தமிழ்நாட்டில், தொழிலாளர் இயக்கம் தனது பயணத்தை முறையாக அடியெடுத்துத்தான் தொடங்கியது என்பதற்குச் சான்றாக வ. உ. சி.யின் பணிகள் திகழ்கின்றன. இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் முதல் முறையாகத் தொழிலாளர்களால் அரசியல் பொது வேலைநிறுத்தம் நடத்தப்பட்டது என்பதும் இதை உறுதிப்படுத்துகிறது.

பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன் அவர்கள், தமது பிற நூல்களைப் போலவே இதிலும், ஒதுக்க முடியாத ஆவணங்களின் துணைகொண்டு தமது கருத்துக்களை வெளிப்படுத்தியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் முற்போக்கு இயக்கங்களின் முன்னோடியாக விளங்கிய வ. உ. சி.யின் வாழ்க்கை ஒரு குறிப்பிட்ட துறையோடு நின்றுவிடுவதல்ல. பல்வேறு பணிகளை வேறுவேறு பார்வையோடு நுணுகி ஆராய வேண்டும்.

அந்த வகையில் வ. உ. சி.யை முழுமையாக ஆய்ந்து வரும் பணியில் பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன் அவர்களும் இளம் ஆய்வாளர் தம்பி ஆ. இரா. வேங்கடாசலபதி அவர்களும் சிறந்து விளங்குகிறார்கள்.

அவர்களது ஆய்வுகள் பல அடுத்தடுத்து மக்கள் வெளியீடு வழியாக வர இருக்கின்றன.

வ. உ. சி.யைப் புரிந்துகொள்வதே அவருக்குச் செய்யும் சிறந்த காணிக்கையாக அமையும் என்று எண்ணுகின்றோம்.

**மே. து. ராசு குமார்**

# நன்றியுரை

சுதேசமித்திரன் அலுவலகத்தில் பழைய இதழ்களைப் பார்வையிட அனுமதி பெற்றுத் தந்த அமரர் உயர்திரு ஏ. பி. சி. வீரபாகு, சுதேசமித்திரன் இதழ்களில் வெளியான செய்திகளைப் படி எடுப்பதிலும் ஒப்பிட்டுப் பார்ப்பதிலும் உதவிய டாக்டர் மே. து. ராசு குமார், தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் ஆவணங்களைப் பார்வையிட அனுமதியளித்துதவிய காப்பக ஆணையர் (1973) திரு. பத்ரிநாத், ஐ.ஏ.எஸ்., சில அரிய நூல்களையும் ஆவணங்களையும் பெற்றுத்தந்த வ.உ.சி. கல்லூரியின் முன்னாள் முதல்வர் அமரர் ஸ்ரீதரமேனன், இந்நாள் முதல்வர் திரு. சி. பாக்கியம், சென்னைப் பல்கலைக் கழகத்தின் அரசியல் துறை இணைப்பேராசிரியர் ஆர். சண்முகசாமி, அரவிந்தரின் ஆங்கிலத் தலையங்கங்களைத் தமிழாக்கம் செய்துதவிய பேராசிரியர் ஏ. இ. ஆறுமுகம், கையெழுத்துப் படியினைப் பிரதி செய்துதவிய அன்பு மாணவர்களும் தோழர்களுமான பி. கணபதி சுப்பிரமணியன், அ. மோகன், வ.உ.சி.யின் புகைப்படம் தந்துதவிய கவிஞர் இளசை அருணா, தட்டச்சு செய்துதவிய எம். தளவாய் ஆகியோர் அனைவருக்கும் என் நன்றி உரியது.

**ஆ. சிவசுப்பிரமணியன்**

# முன்னுரை

1806ஆம் ஆண்டில் நிகழ்ந்த வேலூர் எழுச்சிக்குப் பின்னர் தமிழகம் அடிமைத் துயிலில் ஆழ்ந்திருந்தது. ஒரு நூற்றாண்டுவரை நீடித்த இந்நிலை 1908ஆம் ஆண்டில் மாற்றமடைந்தது. திருநெல்வேலி, தூத்துக்குடி நகர்களில் பொதுமக்கள் கிளர்ந்தெழுந்து தமிழகத்தை உறக்கத்திலிருந்து விழித்தெழச் செய்தனர். இதன் எதிரொலியாகத் திருவனந்தபுரம், மதுரை, கரூர், ஈரோடு ஆகிய நகரங்களிலும் மக்கள் எழுச்சி நிகழ்ந்தது. 1908 மார்ச் திங்களில் இப்பகுதிகளில் இந்நிலையை உருவாக்கிய மூலவர்களாக வ.உ.சி யும் சிவாவும் அமைந்தனர். இதனால் தான் அன்றைய சென்னை மாநிலத்திலேயே முதல் முறையாக அரச நிந்தனை (sedition) வழக்கு இவ்விருவர் மீதும் தொடரப்பட்டது.

இவ்வழக்குத் தொடரப்படுவதற்குச் சில நாள்கள் முன்னர் வ.உ.சி. தலைமையேற்று நடத்திய ஒரு முக்கிய நிகழ்ச்சி கோரல் ஆலை (Coral Mill) வேலைநிறுத்தமாகும். வெள்ளையருக்கு உரிமையான இந்நூற்பாலையில் பணிபுரிந்த ஏழைத் தொழிலாளர்களின் நலனுக்காக அவர் நடத்திய இவ்வேலைநிறுத்தம், அவர் நடத்திய இயக்கங்களில் மிகவும் குறிப்பிடத்தக்க ஓர் இயக்கமாகும். இந்த வேலை நிறுத்தத்தில் மட்டுமன்றி, தொழிலாளர் நலனுக்காகப் பல்வேறு தொழிற்சங்கங்களை நிறுவி வளர்ப்பதிலும் அவர் ஆர்வம் கொண்டிருந்தார். தேசியவாதியான அவா தொழிற்சங்கவாதியாகவும் விளங்கினார்.

ஆனால் அவரது தொழிற்சங்கப் பணி முழுமையாகத் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்படவில்லை. வ. உ. சி. என்றதும் கப்பலும் செக்கும் மட்டுமே நம் கண்முன்

41/2

தோன்றும்படி அவரது வரலாறு நமக்குக் கற்றுக் கொடுக் கப்பட்டுள்ளது. 'கப்பலோட்டிய தமிழன்,' 'செக்கிழுத்த செம்மல்' என்ற சிறப்புப் பட்டங்களும்கூட அவரைக் குறித்த நமது சிந்தனைகள் கப்பலையும் செக்கையும் தவிர வேறு எதுவும் இல்லையோ என்ற கருத்தை உருவாக்கி விடுகின்றன. கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் என்ற சிறப்புப்பட்டங்கள், அவரது புகழை நிலைநிறுத்தியிருக்கின்றன என்றாலும் சிதம்பரனாரின் வாழ்க்கை அவற்றுடன் மட்டுமே அடைபட்டுவிடவில்லை.

வ.உ.சி.யின் செயல்திறன், நாட்டுப்பற்று ஆகிய இரண்டையும் அவர் நிறுவிய 'சுதேசிக் கப்பல் நிறுவனம்' எடுத்துரைக்கிறது. அவரது தியாகவுணர்வையும் திடச் சித்தத்தையும், அவரது சிறைவாழ்வும் செக்கிழுத்த செயலும் உணர்த்தி நிற்கின்றன.

தொழிலாளர் இயக்கத்தின் மீது அவர் கொண்டிருந்த ஈடுபாடும் அதன் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய அரும் பணியும் அவரது மனிதநேயம்—தொலைநோக்கு—சமூகத் தின் விதிகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்பச் செயல் படும் சிந்தனைத்திறன்—ஆகிய மூன்றையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. இதற்குச் சான்றாகச் சில செய்திகளைக் குறிப்பிடலாம்.

1918லிருந்து சென்னை நகரில் பல்வேறு தொழிற் சங்கங்கள் தோன்றி வளர்ந்தன. திரு. வி. க., சக்கரைச் செட்டியார், சிங்காரவேலர், செல்வபதிச் செட்டியார், எம். சி. ராஜா போன்றோர் தொழிலாளர் இயக்கத்தில் முன் நின்றனர். வ.உ.சி.யும் இவர்களோடு இணைந்து பணியாற்றினார்.

தென் இந்திய இரயில்வேத் தொழிலாளர் யூனியனின் சார்பில் விழுப்புரம், மதுரை, நாகப்பட்டினம் ஆகிய ஊர் களுக்குச் சென்று இரயில்வேத் தொழிலாளர்களுக்கான தொழிற்சங்கங்கள் அமைக்கும் முயற்சியில் அவர் ஈடு பட்டார். 1920ஆம் ஆண்டில் வ.உ.சி. நாகப்பட்டினம் இரயில்வேத் தொழிலாளர்களிடையே,

> வெள்ளையரசாங்கத்துக்கு தபால், தந்தி, போலீஸ், இரயில்வே என்ற நான்கு சக்திகள் இருக்கின்றன. வெள்ளை அரசாங்கத்தின் பாதுகாவல் அரணாக விளங்கும் இந்நான்கு அரண்களில் ஒன்றையழித்து விட்டால், வெள்ளையரசாங்கம் உடனே அழிந்து விடும். எனவே, சகோதரர்களே உங்கள் நிலையை விருத்தி செய்துகொள்ள விரும்பினால் உங்கள் தொழிற்சங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமே தவிர அரசாங்கம் உங்களுக்கு உதவிபுரியுமென்று எதிர்பார்க்கக்கூடாது

என்று உரையாற்றியுள்ளார் (T.N.A.: 1920).

இதே ஆண்டில் 'சென்னை மற்றும் தெற்கு மராத்தா இரயில்வேத் தொழிலாளருக்கு ஓர் எச்சரிக்கை' என்ற சிறு பிரசுரத்தையும் வெளியிட்டுள்ளார்.

1920ஆம் ஆண்டில் காங்கிரசின் சென்னை மாநில மாநாடு (Madras Provincial Congress) தனது இருபத்தாறாவது கூட்டத்தொடரை நடத்தியது. அக் கூட்டத்தில் வ.உ.சி. சில தீர்மானங்களை முன் மொழிந்தார். தொழிலாளருக்குக் குறைந்த பட்ச ஊதியம் வழங்கல், நியாயமான வேலை நேரம், குடியிருப்பு வசதி, தொழிற்சங்க உரிமை ஆகியன வழங்கவேண்டுமென்று அத்தீர்மானம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். மற்றொரு தீர்மானத்தில் சென்னை மாநிலச் சட்டமன்றத்தில் தொழிலாளர்களாலும் தொழிற்சங்கங்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தக்க எண்ணிக்கையில் இருக்க வேண்டுமென்று வலியுறுத்தினார் (The Hindu, June 28,1920).

இத்தீர்மானங்களை முன்மொழிந்து பேசும்போது:

> இரயில்வே, தபால், தந்தி, போலீஸ் ஆகிய துறைகளில் தொழிற்சங்கங்கள் நமது கட்டுப்பாட்டிற்குள் இன்னும் வரவில்லை. மக்கள் கூறுவதுபோல

அரசாங்கம் செயல்படாவிட்டால் இத்தொழிற் சங்கங்களை வேலை நிறுத்தம் செய்யும்படித் தூண்ட வேண்டும். காங்கிரஸ்காரர்கள் இத் தொழிற்சங்கங்களை ஊக்குவித்துத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிட்டால் உடனடியாகச் சுயராச்சியம் கிடைத்துவிடும்

என்று கூறியுள்ளார் (T.N.A. : 1920). வ.உ.சி. யின் இக்கூற்றினை இந்திய விடுதலை இயக்க வரலாறு மெய்ப் பித்துவிட்டது. 1943இலிருந்து 1946 வரையிலான காலத் தில் வேலைநிறுத்தங்கள் படிப்படியாக அதிகரித்து வந்தன. இதனைப் பின்வரும் புள்ளிவிவரங்களும் செய்திகளும் உணர்த்துகின்றன:

| ஆண்டு | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | வேலைநிறுத்தம் மேற்கொண்ட தொழிலாளர் எண்ணிக்கை | இழந்த மனித நாட்கள் |
|---|---|---|---|
| 1943 | 716 | 5,25,088 | 23,42,287 |
| 1944 | 658 | 5,50,515 | 34,47,306 |
| 1945 | 848 | 7,82,192 | 33,40,892 |
| 1946 | 1619 | 19,61,948 | 1,27,17,762 |

1946 செப்டம்பரில் தென்இந்திய இரயில்வேயிலும் வடமேற்கு இரயில்வேயிலும் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் நிகழ்ந்தது. தபால் ஊழியர்களும் வடமேற்குப் பகுதியில் வேலைநிறுத்தம் செய்தனர். 1946 ஜனவரியில் 1500 ஆகாயப் படைவீரர்கள் பம்பாயில் வேலைநிறுத்தம் மேற்கொண்டனர். கல்கத்தா ஆகாயப்படையினரும் இவர்களுடன் பின்னர் இணைந்து கொண்டனர். இதே ஆண்டு பிப்ரவரியில் கடற்படை வீரர்கள் 20,000 பேர் பம்பாய்த் துறைமுகத்தில் வேலைநிறுத்தம் செய்து

தங்கள் போர்க்கப்பல்களில் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகளின் கொடிகளை ஏற்றினர் இவர்களுக்கு ஆதரவாக கராச்சி, கல்கத்தா, சென்னை விசாகப்பட்டணம் ஆகிய துறைமுக நகரங்களிலுமிருந்த கடற்படையினரும், டில்லி, தாணா, பூனே ஆகிய நகரங்களில் கரைப்பணி ஆற்றி வந்த கடற் படைவீரர்களும் வேலைநிறுத்தம் செய்தனர். இதே ஆண்டு பிப்ரவரியில் ஜபல்பூரிலுள்ள தரைப்படையின் சிக்னல் பிரிவு வேலை நிறுத்தம் மேற்கொண்டது (Dyakov: 1964).

அடக்குமுறை இயந்திரத்தில் ஏற்பட்ட இவ்வெழுச்சியும் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியும் இந்திய விடுதலையை விரைவுபடுத்தின. இது மறுக்கமுடியாத ஒரு வரலாற்றுண்மையாகும். வ.உ.சி.யின் தொலைநோக்கை இவ்வரலாற்றுண்மை பறை சாற்றுகின்றது. 1920 செப்டம்பரில் காங்கிரசிலிருந்து அவர் விலகிய பின்னரும் அவரது தொழிற்சங்கப் பணிகள் தொடர்ந்தன. 1922இல் கோவையில் நடந்த ஸ்டேன்ஸ் ஆலை வேலைநிறுத்தம் வ.உ.சி.யின் தூண்டுதலால் நடந்ததாக வெள்ளையர சாங்க அறிக்கையொன்று குறிப்பிடுகிறது (T.N.A: 1923).

தொழிலாளர் இயக்கத்திற்கு வ.உ.சி. ஆற்றிய பணிகளை அறிந்து கொள்ளாமல் நாம் வ.உ.சி.யை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. அவரது தொழிற்சங்கப் பணிகள் குறித்துத் தனி ஆய்வே நிகழ்த்தலாம். தொழிலாளர் இயக்கத்தின் மீது வ.உ.சி. கொண்டிருந்த ஈடுபாட்டின் தொடக்கமாக அமைந்ததே தூத்துக்குடி கோரல் ஆலை வேலைநிறுத்தமாகும். 1908 பிப்ரவரி 27இல் அவர் தலைமையில் நிகழ்ந்த இவ்வேலைநிறுத்தத்தை மட்டுமே விரிவாக ஆராயும் ஒரு பொருள் குறித்த தனிச் சிறு நூலாக (monograph) இவ்வெளியீடு அமைந்துள்ளது.

தமிழகத்தின் பல்வேறு அரசியல் கட்சிகளும் வேறு சில இயக்கங்களும் மட்டுமே ஒரு பொருள் குறித்த தனிச் சிறு நூல்களைப் பிரச்சார நோக்கில் வெளியிடுகின்றன.

ஆனால், தமிழ்நூல் வெளியீட்டாளர்கள் ஆய்வுநோக்கில் அமையும் நூல்களை வெளியிட்டாலும் தனிச்சிறு நூல்களை வெளியிடுவதில் பெரும்பாலும் ஆர்வம் காட்டுவதில்லை. நியூசெஞ்சுரி புத்தக நிலையம், மக்கள் வெளியீடு, சென்னை புக் அவுஸ் போன்ற வெளியீட்டாளர்கள் இதற்கு விதிவிலக்காயுள்ளனர்.

இத்தகைய முயற்சியில் ஆர்வம் மிக்கவரும் அன்புத் தோழருமான டாக்டர் மே. து. ராசு குமார் தமது மக்கள் வெளியீட்டின் வாயிலாக இதனை வெளியிட்டுள்ளார். அன்புத்தோழர்கள் வ. முத்தையா, எம். வெங்கடாச்சலம், அ. பிரான்சிஸ் ஆகிய மூவரும் இந்நூலின் முதல் வாசகர்களாகவும் விமர்சகர்களாகவும் பணியாற்றியுள்ளனர். கையெழுத்துப் படியினை அச்சுவாகனம் ஏற்றத் தோழர் பி. கைலாசமூர்த்தி தூண்டுகோலாக இருந்தார். இவர்கள் அனைவருக்கும் என் நன்றி உரியது.

சிவசிதம்பரம்
55, முதல் தெரு
பிரைண்ட் நகர்
தூத்துக்குடி 628 008

ஆ. சிவசுப்பிரமணியன்
5-9-1986
(வ.உ.சி. யின் 114ஆவது
பிறந்த நாள்)

# வ.உ.சி.யும் முதல் தொழிலாளர் வேலைநிறுத்தமும் (1908)

## இந்தியாவில் தொழிற்சாலைகள்

இந்திய நாட்டை அடிமைப்படுத்தி ஆளத்தொடங்கிய ஆங்கிலேயர்கள் இரண்டு விதமான பணிகளை மேற்கொண்டார்கள். ஒன்று அழிக்கும் வேலை; மற்றொன்று புத்துயிரளிக்கும் வேலை (மார்க்ஸ்: 1971: 59). அழிக்கும் வேலையென்பது, அதிக உபரி உற்பத்தியில்லாத, சுய தேவைப் பூர்த்தியுடைய கிராமச் சமூக அமைப்பை உடைத்தெறிவதாகும். புத்துயிரளிக்கும் வேலையென்பது, 'மேற்கத்திய சமுதாயத்தின் பௌதிக அடிப்படைகளை' அமைப்பதாகும். இப்புத்துயிரளிக்கும் வேலையின் முதற் கட்டமாக இருப்புப்பாதைகள் அமைக்கும் பணியினை ஆங்கிலேயர்கள் மேற்கொண்டார்கள். இவ்வாறு ஆங்கிலேயர்கள் இருப்புப்பாதைகளை அமைத்ததன் நோக்கத்தையும் அதனால் இந்தியாவில் ஏற்படும் விளைவுகளையும் குறித்து மார்க்ஸ் இவ்வாறு விளக்கமளித்தார்:

> தங்கள் தொழிலுக்குத் தேவையான பருத்தி, இதர மூலப்பொருள்கள் ஆகியவைகளைக் குறைந்த செலவில் பெறவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான் ஆங்கிலேய மில் முதலாளிகள் இந்தியாவில் இருப்புப்பாதைகளை அமைக்க விரும்புகிறார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் இரும்பும் நிலக்கரியும் உள்ள ஒரு நாட்டில் போக்குவரத்தில் இயந்திர சாதனங்களைப் புகுத்தத் துவங்கி விட்டால், அதற்குப் பின்னால் அந்த நாடு அந்த இயந்திர சாதனங்களைத் தானே உற்பத்தி

செய்வதைத் தடுத்து நிறுத்த முடியாது. பரந்த நீண்டுள்ள ஒரு தேசத்தில் வலைப்பின்னல் போன்ற இருப்புப் பாதைகளைப் பராமரிக்க வேண்டு மானால், உடனடியாகவும், அன்றாடமும் அதற்குத் தேவைப்படுகிற கருவிகளை உற்பத்தி செய்கிற இயந்திரத் தொழில்களை அமைக்கத்தான் வேண் டும்; அவைகளிலிருந்து இருப்புப் பாதைகளோடு நேரடியாகத் தொடர்பில்லாத தொழில்களுக்கும் இயந்திரக் கருவிகளை உபயோகிக்கும் முறை நிச்சய மாக வளரும். ஆகவே, இந்தியாவில் இருப்புப் பாதை அமைப்பு நவீன இயந்திரத் தொழிலின் உண்மையான முன்னோடியாகத் திகழும். இது நிச்சயமாக நடக்கப்போகும் நிகழ்ச்சியாகும்.

மார்க்சின் இக்கணிப்பு மிகவும் தெளிவானது என்பதை வரலாறு நிருபித்து விட்டது. இருப்புப் பாதை களை அடுத்துப் பருத்தி ஆலைகளும் சணல் ஆலைகளும் ஆங்கிலேயர்களால் இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டன. இவர்களைப் பின்பற்றி இந்தியச் செல்வந்தர்களும் ஆலை களை நிறுவத் தொடங்கினார்கள். இதன் விளைவாக இந்தியா தனது பழைய உற்பத்தி முறையிலிருந்து நவீன உற்பத்தி முறைக்குள் வேகமாக நுழையத்தொடங்கியது.

1850லிருந்து 1855 வரையிலான காலத்தில் இந்தியா வின் முதற் பருத்தியாலையும் சில சணல் ஆலைகளும் நிலக்கரிச் சுரங்கங்களும் தோன்றின. 1879இல் 56 பருத்தி ஆலைகள் இந்தியாவில் இருந்தன. 1894-95இல் இது 144 ஆக உயர்ந்தது. இதே ஆண்டில் சணல் ஆலைகளின் எண்ணிக்கை 29 ஆகவும், நிலக்கரிச் சுரங்கங்களின் எண்ணிக்கை 123 ஆகவும் இருந்தன (Desai: 1954: 88). இவ்வாறு இந்தியா ஒரு நவீன தொழில்நுட்ப முறைக்கு அழைத்துச் செல்லப்பட்டது. "தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாமலேயே" ஆங்கிலேயர்கள் செய்த இப்பணியின் விளைவாக இந்தியாவின் சமூக வாழ்விலும்

பொருளாதார வாழ்விலும் அடிப்படையான மாற்றங்கள் சில நிகழ்ந்தன. ஒரு பக்கம் கைவினைஞர்களும் பாரம்பரியத் தொழில் முறைகளும் அழிக்கப்பட்டாலும் மற்றொரு பக்கம் இந்திய தேசியப் பொருளாதாரம் வளரத் தொடங்கியது. நவீன நகரங்கள் தோன்றி, புதிய சிந்தனை வளர்ச்சிகளின் இருப்பிடமாகத் திகழ்ந்தன. எல்லாவற்றிற்கும் மேலாகச் சாதி அடிப்படையிலான பாரம்பரியத் தொழில் பிரிவினைகள் மறையத் தொடங்கி, ஒரே கூரையின்கீழ் பல்வேறு சாதி-மதப் பிரிவினரும் பணியாற்றும் நிலை ஏற்பட்டு 'தொழிலாளர்' என்ற புதிய வர்க்கம் தோன்றியது. இந்திய சமூக வரலாற்றில் இது ஒரு புதிய திருப்பமாகும். மொத்தத்தில் இந்தியா தொழில் மயமானது மாபெரும் சமூகப் புரட்சியாகும். இந்தப் "புரட்சியைச் சாதிப்பதில் இங்கிலாந்தானது தன்னை அறியாமலே வரலாற்றின் கருவியாகப் பயன்பட்டிருக்கிறது" (மார்க்ஸ்: 1971: 29).

**தொழிலாளர் நிலை**

இவ்வாறு இந்தியாவில் தோன்றிய புதிய ஆலைகளிலும் சுரங்கங்களிலும் பணியாற்றிய இந்தியத் தொழிலாளர்களின் நிலை மிகவும் அவலமானதாயிருந்தது. இவர்களின் அவலநிலையை விரிவாக விவரிப்பதைவிட இவர்கள் முன் வைத்த கோரிக்கைகளைப் பார்ப்பதன் வாயிலாகவே அவர்களின் சோக வாழ்க்கையை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

1884இல் அமைக்கப்பட்ட பம்பாய் தொழிற்சாலை ஆய்வுக் குழுவிடம் அளிக்கப்பட்ட ஒரு விண்ணப்பத்தை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கூறலாம். பம்பாய் நகரிலுள்ள ஆலைத் தொழிலாளர்கள் செப்டம்பர் 1884இல் ஒரு பொதுக்கூட்டம் நடத்தினார்கள். அதில் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானங்களையே 1884 நவம்பரில் மேற்கூறிய குழுவிடம் விண்ணப்பமாக அளித்தனர் (Sharma: 1971: 49).

1 ஆலைத் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஞாயிற்றுக் கிழமையன்று முழு விடுமுறையளிக்கப் படவேண்டும்.
2 ஒவ்வொரு வேலை நாளின்போது நண்பகலில் அரைமணி நேரம் இடைவேளை அனுமதிக்கப் படவேண்டும்.
3 ஆலையில், காலை 6-30க்குத் தொடங்கி சூரியன் மறையும்போது வேலை முடியவேண்டும்.
4 ஒவ்வொரு மாதமும் 15ஆம் நாளுக்கு மேற் போகாமல் அவர்களுக்குரிய ஊதியம் வழங்கப் படவேண்டும்.
5 பணியின்போது காயமேற்பட்டால் அது குண மாகும்வரை தொழிலாளிக்கு முழு ஊதியம் வழங்கப்படவேண்டும். முடமாகிப் போனால் அவனுடைய வாழ்க்கைச் செலவுக்குத் தக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

"பாதங்கள் இவையென்றால் படிவம்தான் எப் படியோ" என்று இராமனைப் பாடினான் கம்பன். இவ் விண்ணப்பத்தைப் படிக்கும்போது "கோரிக்கைகள் இவை யென்னின் உண்மை நிலை எப்படியோ" என்று நமக்குக் கூறத் தோன்றுகிறது.

**கோரல் மில்**

இத்தகைய சூழலில்தான் நெல்லை மாவட்டத்தில் பருத்தித் தொழிலில் ஈடுபட்டிருந்த பிராங் ஹார்வி (Frank Harvey) என்ற வெள்ளையன் பாபநாசம் மலை யின் அடிவாரத்தில் ஆலை ஒன்றைத் தொடங்குவதற்கு 1883ஆம் ஆண்டில் திட்டமிட்டான். பாபநாசம் அருவி யின் மேலுள்ள ஆற்று நீரைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்து, அதனை ஆலையை இயக்கப் பயன்படுத்துவது என்ற அறிவியல் நோக்கிலமைந்த அவனது திட்டத்திற்கு ஆங்கில அரசு அனுமதியளித்தது. 1885இல் திருநெல்வேலி

மில்ஸ் கம்பெனி லிமிடெட் (Tinneveli Mills Company Limited) என்ற நிறுவனத்தை பிராங் ஹார்வி உருவாக்கினான். அதே ஆண்டில் 10,000 கதிர்களுடன் (Spindles) தொடங்கிய ஆலை மூன்று வருடங்களுக்குள் 16000 கதிர்களைக் கொண்டதாக மாறியது.

இதன் பின்னர் 1888இல் தூத்துக்குடி நகரில் கடற்கரைச் சாலையில் 'கோரல் மில்' என்ற பெயரில் ஆலையொன்று இதே நிர்வாகத்தால் தொடங்கப்பட்டது (Pate: 1917: 212-213). 1908ஆம் ஆண்டில் இந்த ஆலையின் நிலைகுறித்த விவரங்கள் எதுவும் நமக்குக் கிட்டவில்லை. ஆயினும் 1916ஆம் ஆண்டில் இந்த ஆலையின் நிலை குறித்து ஒன்றிரண்டு செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. அதன்படி இந்த ஆலையானது 1916ஆம் ஆண்டில் 1100 குதிரை ஆற்றல் வாய்ந்த இயந்திரத்தால் இயக்கப்பட்டது. 1800 தொழிலாளர்கள் இதில் பணிபுரிந்தனர். 2500 டன் நூல் உற்பத்தி செய்த இத்தொழிற்சாலை 15 லட்சம் ரூபாய் மூலதனத்துடன் தொடங்கப்பட்ட கூட்டு நிறுவனமாக அமைந்திருந்தது (Pate: 1917: 213).

எனவே, ஆலையின் ஆற்றல், தொழிலாளர் எண்ணிக்கை மற்றும் உற்பத்தி அளவு ஆகியன இதே அளவிலோ அல்லது இதைவிடச் சற்றுக் குறைவான அளவிலோ 1908இல் இருந்திருக்கலாம் என்று மட்டுமே நம்மால் அனுமாணிக்க முடிகிறது.

**தூத்துக்குடியில் வ.உ.சி.**

தூத்துக்குடியில் கோரல் ஆலை தொடங்கி இரண்டாண்டுகள் கழித்து, 1900ஆம் ஆண்டில் வ.உ.சி. ஒட்டப்பிடாரத்தில் இருந்து தூத்துக்குடிக்கு வந்து குடியேறினார். தொடக்கத்தில் வழக்கறிஞராக மட்டும் பணியாற்றிய வ.உ.சி. பின்னர் அன்றைய காங்கிரஸ் இயக்கத்தின் ஓர் அங்கமாகத் தோன்றிய சுதேசி இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பல்வேறு சுதேசி நிறுவனங்களைத் தூத்துக்குடியில் நிறுவினார்.

இம்முயற்சியின், உச்சகட்டமாக, சுதேசிக் கப்பல் நிறுவனம் (சுதேசி ஸ்டீம் நேவிகேசன் கம்பெனி) என்ற பெயரில் ஒரு கூட்டு நிறுவனத்தை 1906 அக்டோபர் 16ஆம் நாள் நிறுவினார். 1907ஆம் ஆண்டில் காலியா (S. S. Gallia), லாவோ (S. S. Lawoe) என்ற பெயரில் இரண்டு கப்பல்கள் தூத்துக்குடிக்கும் கொழும்பிற்கும் இடையே பயணிகளையும் சரக்குகளையும் சுமந்து செல்லத் தொடங்கின.

வ.உ.சி.யின் சுதேசிய முயற்சிகளின் விளைவாக, அன்றைய சென்னை மாநிலத்தில் வெள்ளையர் எதிர்ப் புணர்ச்சி நிலவும் ஒரே இடமாகத் தூத்துக்குடி விளங்கியது.[1]

1908ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் வாரத்தில், விடுதலை உணர்வு மிக்கவரும் ஆற்றல் வாய்ந்த சொற்பொழி வாளரும் துறவியுமான சுப்பிரமணிய சிவா தூத்துக்குடி வந்து சேர்ந்தார். வ.உ.சி. அவரைத் தமது இல்லத்தில் தங்கியிருக்கச் செய்தார். இதன் பின்னர் தூத்துக்குடியின் பல பகுதிகளிலும் கனல் தெறிக்கும் அரசியல் சொற் பொழிவுகளை இருவரும் இணைந்து நடத்தினர்.

வ.உ.சி.யின் தூத்துக்குடி வாழ்க்கை நிகழ்ந்து கொண்டிருந்த இக்காலத்தில் (1900—1908) இந்தியத் தொழிலாளர் நிலையில் எவ்வித மாற்றமுமில்லை. முன்னர் குறிப்பிட்ட நிலையே நீடித்தது. ரீஆய் (Lord Reoy) என்ற ஒரு முன்னாள் இந்திய அதிகாரி ஆற்றிய உரையினை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம் (Levkovsky: 1966: 319).

> 1905ஆம் ஆண்டில் இலண்டனிலுள்ள ஆங்கில முதலாளிகளின் கூட்டத்தில் ரீஆய் பேசும்போது குறைந்த ஊதியத்தில் தொழிலாளர்கள் கிடைக்கும் —தொழிற் சங்கங்கள் இல்லாத — இந்தியாவில் முதலீடு செய்யும்படி அவர்களை வற்புறுத்தினான். உழைப்பாளிகளைச் சுரண்டுவதற்கு ஓர் எல்லை

யற்ற சூழல் இந்தியாவில் நிலவுகிறது என் .பதனையே ரிஆய் இவ்வாறு கூறியுள்ளான்.

**கோரல் மில் தொழிலாளர் நிலை**

தூத்துக்குடியில் இருந்த கோரல் மில்லிலும் ரிஆய் குறிப்பிட்ட நிலைதான் நிலவியது. தொழிற்சங்கம் எதுவும் அங்கு கிடையாது (கூலிகள் என்ற பெயராலேயே அன்று தொழிலாளர்கள் இழிவாக அழைக்கப்பட்டனர்). குறைந்த ஊதியத்தையளித்து, கடுமையாக வேலையை வாங்குவதில் இவ்வாலை நிர்வாகம் கைதேர்ந்ததாக இருந்தது இதன் விளைவாக இதன் பங்குதாரர்களுக்கு 60% இலாபப்பங்கு (Dividend) கிடைத்தது (Narasimhan: 1963: 62-63; Venkatakrishnan: 1972: xxix).

ஆனால் தொழிலாளர்களின் நிலை மிகவும் வருந்தத் தக்கதாய் இருந்தது. பத்து வயது, பன்னிரண்டு வயதுச் சிறுவர்களும் ஆலையில் தொழிலாளர்களாகப் பணிபுரிந் தனர். வார விடுமுறையென்பது, தொழிலாளர்கள் அறியாத ஒன்றாக இருந்தது. உணவருந்தச் செல்லப் போதிய இடைவேளை கிடையாது. ஊதியமும் மிகக் குறைவு. உடல்நலக் குறைவாலோ, குடும்ப வேலைகள் நிமித்தமாகவோ விடுமுறையெடுப்பின் அதற்கு ஊதியம் மறுக்கப்படும். அத்துடன் சில நேரங்களில், விடுமுறை முடிந்து பணிக்குத் திரும்பிய தொழிலாளிக்கு வேலை மறுக்கவும்படும். இதனால் ஊதியமில்லாத விடுமுறை யில் செல்வதற்கும்கூடத் தொழிலாளர்கள் அஞ்சினார்கள்.

காலை ஆறு மணியிலிருந்து மாலை ஆறு மணிவரை தொழிலாளர்கள் தொடர்ச்சியாக வேலை செய்தனர். 'ரேகை பார்த்து ஓட்டுதல்' என்ற சொல்லால் வேலையின் தொடக்கமும் முடிவும் குறிப்பிடப்பட்டது. உள்ளங்கை இரேகையானது தெளிவாகத் தெரியும் நேரத்தில் வேலை யினைத் தொடங்கி அதனைப் பார்க்கமுடியாத அளவில் ஒளி மங்கும் நேரத்தில் வேலையை முடிக்கவேண்டும் என் பதே 'ரேகை பார்த்து ஓட்டுதல்' என்ற சொல்லின் பொரு

ளாகும். தொழிலாளர்கள் செய்யும் சிறு தவறுகளுக்குக் கூடத் தண்டனையாகப் பிரம்படி வழங்கப்பட்டது. வெள்ளை அதிகாரிகள் ஆலையினுள் வரும்போது குறுக்கே கடந்து சென்றாலும் அடியும் உதையும் கிடைக்கும்.[2]

தொழிலாளிகள் வேலை செய்யும் ஆலையின் தளம் தாரினால் (கில் எண்ணெய்) உருவாக்கப்பட்டிருந்தது. நண்பகல் நேரத்தில் தார் இளகி நிற்கும். கோடை காலத்தில் சொல்லவே வேண்டாம். இத்தளத்தின் மீதிருந்தே காலையிலிருந்து மாலை வரை தொழிலாளர்கள் பணியாற்றவேண்டியிருந்தது.

**வேலைநிறுத்தத்திற்கான தயாரிப்பு**

கோரல் மில் தொழிலாளர்களின் அவல நிலையைக் கண்ணுற்ற வ.உ.சி. அதனைப் போக்குவதற்கு முன் வந்தார். சுப்பிரமணிய சிவாவும் பத்மநாப அய்யங்கார் என்பவரும் இம்முயற்சியில் வ.உ.சி.க்கு உறுதுணையாக நின்றனர். வ.உ.சி.யும் சிவாவும் வேலைநிறுத்தம் செய்யும்படி தொழிலாளர்களைத் தூண்டினர். 1908 பிப்ரவரி 23இல் சிவா தூத்துக்குடி நகரில் ஆற்றிய சொற்பொழிவு குறித்து ஆங்கில அரசின் இரகசியப் போலீஸ் அறிக்கை (N.A.I.: 1908: 7) இவ்வாறு குறிப்பிடுகிறது:

> ஆண்டுதோறும் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குச் செல்லும் பணத்தின் அளவை அவர் குறிப்பிட்டார். இதனைத் தவிர்க்க வேலைநிறுத்தம் செய்யும்படி கூலிகளுக்கு அறிவுரை கூறினார். ருசியப் புரட்சியானது* மக்களுக்கு நன்மையளித்

* 1905ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் ருசியப் புரட்சியையே சிவா குறிப்பிடுகிறார். இப்புரட்சி தோல்வியுற்ற புரட்சியென்றாலும், கொடுமையை எதிர்க்கும் உணர்வை மக்களிடம் ஊட்டியது. இந்தியாவில் காங்கிரஸ் தீவிரவாதிகளிடையே இப்புரட்சி ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியது.

துள்ளது. புரட்சியானது உலகத்துக்கு எப்பொழுதும் நல்லதையே புரியும் என்றும் அவர் குறிப்பிட்டார். வேலையாட்கள் மூன்று நாட்கள் வேலையை நிறுத்தினால் ஐரோப்பிய முதலாளிகள் மிக மோசமாகப் பாதிக்கப்படுவார்கள் என்றும் கூறினார்.

பிப்ரவரி 26இல் வ.உ.சி.யும் சிவாவும் ஆற்றிய உரையில் வேலைநிறுத்தம் குறித்துத் தொழிலாளர்களுக்கு இவ்வாறு அறிவுரை கூறியதாகவும் அதே அறிக்கை குறிப்பிடுகிறது (N.A.I.: 1908 :8).

> சுதேசி இயக்கத்தை வெற்றியடையச் செய்யும் எந்த முயற்சியும் தொழிலாளர்களின் கையில்தான் இருக்கிறதென்று அவர்* சொன்னார். அதிகக் கூலி கேட்டுக் கூலிகள் வெளியில் நின்றால், இந்தியாவிலுள்ள ஐரோப்பிய ஆலைகள் நிலைத்திருக்க முடியாது. ஆலை முதலாளிகளை முடக்குவதற்கு இரண்டு வழிகள் உள்ளன; இயந்திரங்களுக்கு ஊறு விளைவிப்பது ஒன்று, வேலைநிறுத்தம் செய்வது மற்றொன்று. இரண்டாவது வழியை அவர்கள் பின்பற்றுவதே சிறந்தது என்று தாம் கருதுவதாக அவர் கூறினார். ஆனால் சிதம்பரம் பிள்ளை அங்கு கூடியிருந்த மில் கூலிகளை இரண்டு வழிகளையும் பின்பற்றும்படித் தூண்டினார். அந்தக் கூட்டம் முடியும்போது அங்கு கூடியிருந்தவர்களின் எண்ணிக்கை மூவாயிரம் என்று சொல்லப்படுகிறது.

**வேலைநிறுத்தத்தின் தொடக்கம்**

கோரல் மில் தொழிலாளர்கள் 1908 பிப்ரவரி 27இல் வ.உ.சி., சிவா ஆகியோரின் தலைமையில் வேலைநிறுத்தத்தைத் தொடங்கினர்.[3] வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்கள்,

---

*. சுப்பிரமணிய சிவா.

1 ஊதிய உயர்வு
2 வார விடுமுறை
3 இதர விடுமுறை வசதிகள்

ஆகியனவற்றைத் தங்கள் முக்கிய கோரிக்கைகளாக முன் வைத்தனர். இவ்வேலைநிறுத்தம் குறித்து 28-2-1908 சுதேசமித்திரன் பின்வரும் செய்தியினை வெளியிட்டது:

தூத்துக்குடி பவளத் தொழிற்சாலை
வேலைநிறுத்தம்

தூத்துக்குடியிலிருந்து இன்றும் ஒரு தந்தி கிடைத்திருக்கிறது. புதுக்கட்சி* பலமாய் வேரூன்றி விட்டதெனவே தோன்றுகின்றது. இன்று தினம் காலையில் 500 பேர் வேலையை நிறுத்திவிட்டார்கள். இன்னும் அநேகர் நிறுத்துவார்கள் போலத் தோன்றுகிறது. இந்த பவளத் தொழிற்சாலைக் கம்பெனியார் இந்தியக் கூலியாட்களை மிகவும் கொடுமையாய் நடத்தியதுமன்றி, கஷ்டப்படுத்தி வேலை வாங்குவதற்குப் போதிய சம்பளம் தராமையே இந்த வேலைநிறுத்தத்திற்குக் காரணமாகும்.

இனியாவது கம்பெனியார் கண்ணைத் திறப்பார்களா?

வேலைநிறுத்தம் தொடங்கியவுடன் மாவட்ட ஆட்சித்தலைவர், இருபது போலீசாரையும் இரண்டு அதிகாரிகளையும் திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடிக்கு அனுப்பி வைத்தார். வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து பொதுக்கூட்டம் நடைபெறும் என்பதை அறிந்த தூத்துக்

* 1907இல் திலகர் தலைமையை ஏற்றுக் கொண்ட காங்கிரஸ் உறுப்பினர்கள், தீவிரவாதிகள் என்று தனி அணியாகச் செயல்பட்டனர். இதுவே 'புதுக்கட்சி' என்றழைக்கப்பட்ட

குடி டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கூட்டங்களைத் தடை செய்து 144 தடை உத்தரவு பிறப்பித்தார். சிவகாசியிலிருந்து மேலும் 30 போலீசார் வரவழைக்கப்பட்டனர். போலீசார் வருவதற்கு முன்னர் கோரல் ஆலையின் மீது கற்கள் வீசப்பட்டதுடன் ஆலையின் தண்ணீர்ப் பம்புகள் பழுதாக்கப்பட்டன. வேலைநிறுத்தம் தொடங்கிய மறுநாளான பிப்ரவரி 28இல், மாவட்ட ஆட்சித்தலைவராக விளங்கிய விஞ்ச் என்பவன் தூத்துக்குடி வந்தான். அன்று காலையில் வாகனங்களில் சென்ற சில வெள்ளையர்கள் மீது கற்கள் வீசப்பட்டதாக அவனிடம் கூறினார்கள் (N.A.I.: 1908: 8).

அன்று மாலையில் தடையுத்தரவு நடைமுறையில் இல்லாத ஒரு பகுதியில் பொதுக்கூட்டம் நிகழ்ந்தது. அத்துடன் தனியார் ஒருவரது வீட்டில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவருடன் நிகழ்ந்த உரையாடலைத் தொழிலாளர்களிடம் வ.உ.சி. கூறினார். வேலைநிறுத்தமானது தன்னுடைய தலையீட்டினால் நிகழவில்லை என்றும் கூலிகளை மில் உரிமையாளர்கள் பட்டினி போட்டதால் நிகழ்ந்தது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தாம் கூறியதாக வ.உ.சி. தெரிவித்தார் (N.A.I. 19J8: 8; T.N.A.: 1908).

வேலைநிறுத்தத்தைத் தொடரும்படி தொழிலாளர்களை வ.உ.சி. ஊக்குவித்ததுடன், சில தனி நபர்கள் நன்கொடை அளிப்பதாக வாக்களித்துள்ளனர் என்றும் அதன் வாயிலாக அவர்களுக்கு உணவு வழங்கப்படும் என்றும் வாக்குறுதி அளித்தார் (N.A.I.: 1908: 8).

**வேலைநிறுத்தத்தின் தொடர்ச்சி**

தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் கோரல் மில் நிர்வாகத்தினரிடம் எவ்வித மாறுதலையும் ஏற்படுத்தவில்லை. தொழிலாளர்கள் மனவுறுதியிழந்து விரைவில் வேலைக்குத் திரும்பிவிடுவரென்று நிர்வாகம் கருதியது. ஆங்கில அரசும் வேலைநிறுத்தத்தை முறியடிப்பதில்

ஆலை நிர்வாகத்திற்கு உறுதுணையாக நின்றது. ஆனால் வேலைநிறுத்தத்தை மேற்கொண்டிருந்த தொழிலாளர்கள் மனவுறுதியுடன் நின்றனர்.

சுதேசமித்திரன், இந்து (The Hindu) நாளேடுகளில் வெளியான செய்திகள் நிர்வாகத்தின் சூழ்ச்சிகளையும் தொழிலாளர்களின் மன உறுதியையும் நமக்குப் புலப் படுத்துகின்றன.

தூத்துக்குடி வேலைநிறுத்தம்

தூத்துக்குடி வேலைநிறுத்தம் பழையபடி பலத்துக் கொண்டுதான் வருகின்றது. வேலை யாட்கள் எல்லோரும் தினம்தோறும் ஒரு கூட்டம் கூடித் தங்களுடைய குறைபாடுகளைச் சீர்திருத்திச் சம்பளம் உயர்த்திக் கொடுத்தாலன்றி வேலை செய்வதில்லை என்று சத்தியம் செய்துகொண்டு வருகிறார்கள்.

இதுவரையும் அங்கும் சேராமல் இங்கும் சேராமல் அரைமனதாய் நின்ற சில வேலையாட் களும்கூட இப்பொழுது ஒரே மொத்தமாய் வேலை நிறுத்தக் கட்சியாளருடன் வந்து கூடிக் கொண் டார்கள். பவளத் தொழிற்சாலை வேலை அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டது.

(சுதேசமித்திரன், 3-3-1908, தலையங்கக்குறிப்பு)

தூத்துக்குடி வேலைநிறுத்தம்

சென்ற வியாழக்கிழமை காலையில் தூத்துக்குடி பரதேசிக்* கம்பெனியைச் சேர்ந்த மாணிக்கமாசாரி என்னும் ஒரு மனிதன் சில போக்கிரிகளைக் கூட்டிக் கொண்டு, வேலைநிறுத்தம் செய்திருக்கும் கூலியாட் கள் வீடுகளுக்குள் பிரவேசித்து, அவர்களைப் பல விதமாய்ப் பயமுறுத்தி வேலைக்குத் திரும்பும்படி தூண்டியதில் ஒன்றும் நடக்கவில்லை.

---

* வெள்ளையர்.

சாயங்காலம் இந்த ஆட்களும் வேறு சில கான்ஸ்டபில்களும் கூடிக்கொண்டு வேலைநிறுத்தக் காரர்களுள் சில சிறுவர்களைப் பலவந்தமாய்ப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய் பரதேசிக் கப்பற் கம்பெனி* ஆபிசுக்குள் அடைத்து வைத்திருந்தார்கள்.

இச்சிறுவர்களின் தாய்மார் கூவே கூவென்று சப்தமிட்டுக் கொண்டு போலீஸ் அதிகாரிகளிடம் போய் முறையிட்டார்கள். ஆனால் போலீஸ்காரர்கள் மேற்படி சிறுவர்கள் கொலை செய்யப்பட்டதாகப் பிரியாது** கொண்டு வந்தாலன்றி வேறு பிரியாதுகளை தாக்கல் செய்யமுடியாதென்று சொல்லிவிட்டார்களாம்.[4]

(சுதேசமித்திரன், 7-3-1908, செய்தி)

நம் தொழிலாளிகள்

புழுவுங்கூட மிதிபட்டால் தலையைத் தூக்கிக் கடிக்கப் பார்க்குமல்லவா?

அப்படியே புழுக்கள் போல் பிறர் கொடுமைகளைச் சகித்துக் கொண்டிருந்த நமது ஏழைத் தொழிலாளிகள் இப்போது தன்னினைவு வந்து தங்களை மிதிக்கிறவர்களைத் திருப்பிக் கடிக்கக் கற்றுக் கொள்வதைப் பார்த்து யார்தான் சந்தோஷப்பட மாட்டார்கள்......

(சுதேசமித்திரன், 7-3-1908, தலையங்கம்)

STRIKERS REFUSE TO REJOIN

TUTICORIN, March 5th:

The strike at the mills shows no sign of ending. Yesterday morning, the mill Agent, with the

* பிரிட்டிஷ் இந்தியன் ஸ்டீம் நேவிகேசன் கம்பெனி.

** பிரியாது—பிராது; முறையீட்டு விண்ணப்பம் (complaint).

'Videshi Steamer Company's' employees* went round the town and begged the people to induce the strikers to resume work. The people refused all help. The agent took six maistries by force to the mill premises, confined them there for three hours, and exhorted the others to resume work, misrepresenting that the confined hands had done so. But the strikers refused to return unless and until their grievances were redressed. The confined men scaled over the back wall and escaped home. Then the Agent sent his broker to negotiate and bring the strikers round. The strikers declined. They were paid one week's provision from the Relief Fund raised by Mr. Vakil Venkatarama Aiyar.

(The Hindu, Madras, 5-3-1908)

இவ்வாறு வெள்ளையரின் நிர்வாகத்திலிருக்கும் ஆலையில் நிகழ்ந்த இவ்வேலைநிறுத்தம் குறித்த செய்தி தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியாவிலும் பரவியது. அரவிந்தர் 'வந்தேமாதரம்' (Bande Mataram) என்ற ஆங்கில இதழில் இது குறித்து வெளியிட்ட பின்வரும் செய்தி இதற்குச் சான்றாகும்:

> இன்று தூத்துக்குடியில் நடந்து கொண்டிருக்கும் போராட்டம் சுவையானது, கூர்ந்து கவனிக்கத் தக்கது. வீறுகொண்டு பொங்கி எழும் தேசிய உணர்வே தன் உயிர்மூச்சு என்பதைச் சென்னை மாநிலம் வெளிப்படுத்துவது இது முதல் தடவை அல்ல. ஆனால் இம்முறை அங்கு மக்களுடைய சிந்தனை, செயல் போக்கில் காணப்படும் திருத்தமான, ஆழ்ந்த உறுதிப்பாடு முந்தைய கிளர்ச்சிகளில் காணப்படாத ஒன்று. இது சிறந்த

* The employees of ritish Steamer Company.

முன்னேற்றமே. வரவிருக்கும் ஒரு பெரும் கலகத்தில் சிறு வெளிப்பாடாக இக்கிளர்ச்சியை ஆளும் வர்க்கத்தினர் ஏன் கருதுகிறார்கள் என்பது அவர்களுக்கே வெளிச்சம். தொழிலாளர் அங்கு உறுதியோடும் கண்ணியத்தோடும் அமைதியான சுய கட்டுப்பாட்டோடும் நடந்து கொண்டிருக்கிறார்கள். பதறிக் கலக்கமடைந்திருக்கும் உள்ளூர் அரசாங்க அதிகாரிகளுக்கு அவர்கள் எவ்வித்திலும் பிடி கொடுக்காதிருக்கிறார்கள்.

தன்மானம் மிக்க இத்தொழிலாளரின் எழுச்சி மக்களின் உற்சாகமான ஆதரவைப் பெற்றுள்ளது. இதிலிருந்து ஒன்றை நாம் யூகிக்க முடிகிறது. இக்கிளர்ச்சி, ஆங்கில முதலாளித்துவம் இந்தியத் தொழில் சக்தி மீது கொண்டிருக்கும் யதேச்சதிகாரக் கட்டுப்பாட்டிற்கு எதிரானது மட்டுமல்ல; முடிவில் ஆங்கில ஆட்சியையே அழிக்கும் நோக்கம் கொண்டது என்று அதிகார வர்க்கத்தினர் கருதுகிறார்கள். 'ஆட்சியாளரின் நலன்களும் சுரண்டலும் இணைந்தே இருக்கும்' என்ற இக்கருத்தைத் தீர்க்க தரிசனத்தோடு கர்ஸன் பிரபு கூறினான். இக்கருத்தின் அடிப்படையிலேயே தூத்துக்குடியில் இன்று கோரல் மில் அதிபர்களுக்கும் ஆங்கில அரசாங்கத்திற்கும் இடையே நிலவும் விவஸ்தையற்ற உறவு அமைந்துள்ளது. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா இவர்கள் தலைமையில் போராடும் தொழிலாளர் மிகப் பொருத்தமான தலைவர்களைக் கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது. போராட்டத்திலும் இன்றுவரை தளராது நிற்கிறார்கள். போராடும் இத்தொழிலாளரின் மன உறுதியிலும் விவேகத்திலும் பெரும் நம்பிக்கை வைத்து, போராட்டத்தில் அடுத்து நிகழவிருப்பனவற்றைக் காண ஆவலோடு காத்திருக்கிறோம்.

(வந்தேமாதரம், 4-3-1908)

**வ.உ.சி.யும் வேலைநிறுத்தமும்**

இந்தியா முழுவதும் அனைவரது கவனத்தையும் ஈர்த்த கோரல் மில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை வெறும் ஊதிய உயர்வுப் போராட்டமாக மட்டும் வ.உ.சி. கருதவில்லை. இந்திய விடுதலை இயக்கத்தில் ஒரு திருப்புமையமாக அமைந்த சுதேசி இயக்கத்துடன், தொழிலாளி வர்க்கத்தை இணைக்கும் நோக்குடன் வ.உ.சி. செயல்பட்டார். எனவே நாள் தோறும் தூத்துக்குடி நகரின் பல பகுதிகளிலும் சுதேசி இயக்கத்தின் கொள்கை விளக்கக் கூட்டங்களை நடத்தி அதில் கோரல் மில் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் குறித்தும் உரையாற்றினார். இதன் விளைவாகத் தொழிலாளர்களின் போராட்ட உணர்வு தீவிரமான துடன் பொதுமக்களின் ஆதரவும் அவர்களுக்குக் கிடைத் தது. சுதேசிக் கப்பல் கம்பெனியைப் போன்று சுதேசி நூற்பாலையொன்றையும் நிறுவ வ.உ.சி. திட்டமிட்டிருந் தார் என்பதனை இத்தகைய கூட்டங்களில் அவர் ஆற்றிய உரைகளின் வாயிலாக அறிகிறோம் (T.N.A.: 1911).

தூத்துக்குடியில் சப்கலெக்டராயிருந்த ஆஷ் என்ற ஆங்கிலேயன் வேலைநிறுத்தத்தை முறியடிப்பதில் முன் நின்றான். இம் முயற்சியின் ஒரு பகுதியாகத் தன்னை வந்து பார்க்கும்படி வ.உ.சி.க்குச் செய்தியனுப்பினான். வ.உ.சி.யின் உயிருக்கு இடையூறு ஏற்படும் என்றஞ்சிய அவரது நண்பர்கள் ஆஷைக் காண்பதற்குச் செல்ல வேண்டாம் என்று தடுத்தனர். ஆனால் வ.உ.சி. அச்ச மின்றி டி. ஆர். மகாதேவய்யர் என்ற வழக்கறிஞருடன் மார்ச் 3ஆம் நாள் ஆஷைக் காணச் சென்றார். இந்தச் சந்திப்பின்போது வ.உ.சி.க்கும் ஆஷுக்கும் நிகழ்ந்த உரை யாடல் வ.உ.சி.யின் சுயசரிதையில் (1946: 68) இவ்வாறு இடம் பெற்றுள்ளது:

ஆசுவைக் கண்டதும், "அழகிய மில்லினை
மோசம் செய்ததென் மொழிகுவா" என்றான்.

"கொடியபல செய்து கூலி யாட்களை
மடியும் விதத்தினில் வருத்திவந் ததனால்
வேலையை நிறுத்தினர்; வேண்டுவ கேட்டுளேன்;
நாலு தினத்தினில் நன்மையாம்" என்றேன்.
படையின் செருக்கைப் பகர்ந்தான். எழுந்தேன்
"படையிலா ரிடத்தைப் பகர்தல்நன் றன்" றென்றேன்!

ஆஷின் அச்சுறுத்தல் குறித்துக் கவலைப்படாது, வ.உ.சி.யும் சிவாவும் வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்தினர். 1908ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக வேலை நிறுத்தத்தை மேற்கொள்வதென்பது சற்றுக் கடினமான செயலாகும். இன்று இருப்பதுபோலத் தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகச் சாலைகளோ, இ.எஸ்.ஐ. (E.S.I.) விடுமுறை வசதிகளோ இல்லாத ஒரு சூழ்நிலையில் பட்டினியுடன்தான் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடமுடியும்.

ஆனால் வ.உ.சி. இதற்கும் ஒரு வழி கண்டார். பொதுமக்களிடம் நிதி திரட்டித் தொழிலாளர்களின் பட்டினியைப் போக்க ஏற்பாடு செய்தார் (T.N.A.: 1908). வெங்கட்ராமையர் என்ற வழக்கறிஞர் திரட்டிய நிவாரண நிதியிலிருந்து ஒரு வாரத்துக்குரிய உணவுப் பொருள்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன (The Hindu, 5-3-1908).

### ஜார் தூதுவரின் அறிக்கை

வேலைநிறுத்தம் செய்த ஆயிரம் தொழிலாளர்கள் நாள்தோறும் வந்தே மாதரம் முழக்கமிட்டுக்கொண்டு தூத்துக்குடி நகர் வீதிகளில் ஊர்வலமாக வந்தனர் என்று அன்றைய ரஷ்ய ஜார் மன்னனின் இந்தியத் தூதுவராகப் பம்பாயில் பணியாற்றிய செக்கின் (Chirkin) என்பவர் ஜாருக்கனுப்பிய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் இவ்வறிக்கையில் "இது திறம்பட நடத்தப்படும் வேலை நிறுத்தம் ஆகும். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழி

லாளர்களுக்கு உணவு படைக்க வேலைநிறுத்தத்தை நடத்தும் தலைவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்" என்றும் குறிப்பிட்டுள்ளார் (Reisner: 1966: 645-46).

'டைம்ஸ் ஆஃப் இந்தியா' (7-3-1908) என்ற நாளிதழிலும் கோரல் மில் தொழிலாளர்கள் வந்தே மாதரம் முழக்கமிட்டுக் கொண்டு ஊர்வலம் சென்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (Levkovsky: 1966: 457).

**பொதுமக்களின் எழுச்சி**

நெல்லை மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்த விஞ்ச் என்பவன் வேலைநிறுத்தத்தை நிறுத்தும்படி வ.உ.சி.யை எச்சரித்தான். ஆனால் வ.உ.சி. அதற்கஞ்சவில்லை. வ.உ.சி., சுப்பிரமணிய சிவா ஆகியோரின் சொற்பொழிவுகளால் ஈர்க்கப்பட்ட தூத்துக்குடி வியாபாரிகள் ஆங்கிலேயர்களுக்கு உணவுப் பொருள்களை விற்க மறுத்தார்கள். இலங்கையிலிருந்து ஆங்கிலேயர்களுக்கு உணவுப் பொருள் வரவழைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. வெள்ளையர்களுக்கு வேலை செய்ய இந்திய வேலையாட்கள் மறுத்தனர். தெருக்களில் ஆங்கிலேயர்களைக் கண்டால் அவர்களைச் சூழ்ந்துகொண்டு வந்தே மாதரம் என்று கூறும்படி மக்கள் கூட்டம் கட்டாயப்படுத்தியது (Reisner: 1966: 646).

தூத்துக்குடியில் வாழும் ஐரோப்பியர்கள் இரவு தங்கள் வீடுகளில் தங்குவதற்கு அஞ்சி அவற்றைவிட்டு வெளியேறி பிரிட்டிஷ் இண்டியன் ஸ்டீம் நேவிகேசன் கம்பெனி அலுவலகத்தில் தங்கி இரவைக் கழித்தனர் (T.N.A.: 1908).

ஸ்வீட்டிங் (Sweeting) என்ற மாவட்டப் போலீஸ் அதிகாரி சைக்கிளில் செல்லும்போது சில சிறுவர்கள் வந்தேமாதரம் என்று கூச்சலிட்டார்கள். இதனைத் தடுக்கத் தவறியதற்காக ஒரு போலீஸ்காரர் பத்து நாட்களுக்குத் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டார் (The Hindu, 5-3-1908).

'டைம்ஸ் ஆப் இந்தியா' என்ற நாளேடு (The Times of India, 14-4-1908) தூத்துக்குடியில் இதுபோல் நிகழ்ந்த வேறு சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுள்ளது. சாப்மன் (Chapman) என்ற ஆங்கிலத் தோட்ட முதலாளியின் வேலையாட்கள் மீது கற்கள் வீசப்பட்டன. அவனது சமையற்காரரும் நாவிதரும் அச்சுறுத்தப்பட்டனர். சுத்தி கரிப்புத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்ததால் வெஸ்ட் மூர்லாண்ட் (West Moreland) என்ற வெள்ளையன் மிகுந்த தொல்லைக்குள்ளானான் (Reisner: 1966: 646). மொத்தத்தில் கோரல் மில் வேலைநிறுத்தத்தின்போது தொழிலாளர்களின் மீது வழக்கத்திற்கு மாறான ஆழ்ந்த அனுதாபவுணர்வு நெல்லை மாவட்டம் முழுவதும் மேலோங்கியிருந்தது. பொது மக்கள் அமைதியற்றுக் காணப்பட்டார்கள் (Reisner: 1966: 646).

இம்மக்கள் எழுச்சியை ஒட்டி நிகழ்ந்த ஒரு சுவை யான நிகழ்ச்சி 'நாவிதர் சவரம் செய்ய மறுக்கிறார்' (A Barber refuses to shave) என்ற தலைப்பில் 'இந்து' நாளேட்டில் (5-3-1908) பிரசுரமாகியுள்ளது.[6]

வெள்ளையர் ஆதரவாளரான ரெங்கசாமி ஐயங்கார் என்பவர் சவரம் செய்து கொள்வதற்காக ஒரு நாவிதர் முன் அமர்ந்தார். அந்நாவிதர் சுதேசி இயக்கத்தில் ஈடு பாடு கொண்டவராவார். தூத்துக்குடியில் மக்கள் எழுச்சியை அடக்க வெளியூரிலிருந்து போலீசைத் தருவிக்க வேண்டுமென்ற மாவட்ட ஆட்சித்தலைவரின் கருத்தை அவர் ஆதரித்தது உண்மைதானா என்று நாவிதர் வினவி னார். உடனே ரெங்கசாமி ஐயங்கார் இது உன் வேலை யல்ல என்று பதிலளித்தார். உடனே நாவிதரும் உமக்குச் சவரம் செய்வது என்னுடைய வேலையல்ல என்று கூறிச் சென்றுவிட்டார். பின்னர் ரெங்கசாமி ஐயங்கார் மற்ற நாவிதர்களிடம் செல்ல, அவர்கள் சவரம் செய்ய மறுத்து விட்டார்கள். குதிரை வண்டி ஓட்டுபவர்களும் அவருக்கு வண்டி ஓட்ட மறுத்துவிட்டார்கள். உணவு விற்பவர்கள் அவருக்கு உணவு விற்க மறுத்துவிட்டனர்.

இதன் தொடர்ச்சியாக மற்றொரு செய்தியும் 6-3-1908 'இந்து' நாளேட்டில் வெளியாகியுள்ளது. அச்செய்தியின் மூலம் அவரது சலவைத் தொழிலாளி அவருக்குச் சலவை செய்ய மறுத்துவிட்டதுடன் ஏற்கனவே எடுத்துச் சென்ற துணிகளைத் திருப்பிக் கொடுக்க மறுத்துவிட்டார் என அறிகிறோம்.

1908 மார்ச் திங்களில் தூத்துக்குடியில் நிலவிய மக்கள் எழுச்சியினை இச்செய்திகள் படம் பிடித்துக் காட்டு கின்றன. வ.உ.சி.யும் சிவாவும் உயர்நீதி மன்றத்தில் செய்த முறையீட்டை ஆராய்ந்த வெள்ளை நீதிபதிகள் கோரல் ஆலை வேலைநிறுத்தத்தையொட்டி, பொது மக்களின் நடவடிக்கைகளில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன என்று குறிப்பிட்டுள்ளார்கள் (T.N.A.: 1911).

அரசுத் தரப்பு சாட்சி ஒருவர் குறுக்கு விசாரணையின் போது 1908 பிப்ரவரி 27இல் நிகழ்ந்த வேலைநிறுத்தத் திற்குப் பின்னர் மக்கள் போலீசாருக்கு அடங்க மறுத்த துடன் கூட்டமாய் நிற்கத் தொடங்கினர் என்றும் கலைந்து போகும்படி உத்தரவிட்டாலும் கலைந்து போக மறுத்தனர் என்றும் கூறியுள்ளார் (T.N.A.: 1911).

1908ஆம் ஆண்டிலேயே தூத்துக்குடி நகரமானது சப்கலெக்டர், டி.எஸ்.பி. ஆகிய அதிகாரிகளின் இருப்பிட மாக இருந்தது. ஆங்கிலேயர்களே இவ்வுயர் பதவிகளை வகித்து வந்தனர். துறைமுக நகரம் என்ற முறையில் இங்கு இயங்கி வந்த ஏற்றுமதி இறக்குமதி நிறுவனங்களும் கப்பல் நிறுவனங்களும் பிற வணிக நிறுவனங்களும் தொழிற்சாலைகளும் வெள்ளையரின் பிடிக்குள்ளேயே இருந்தன. இதன் காரணமாகத் தூத்துக்குடியில் இருந்த பல தரப்பினருக்கும், வெள்ளையர்மீது வெறுப்புணர்ச்சி நிலவுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருந்தன. தூத்துக்குடியில் நிகழ்ந்த பொதுக்கூட்டங்களில் வெள்ளை யர்களைக் குறித்து வ.உ.சி யும் சிவாவும் ஆற்றிய கண்டன உரைகளும் வெள்ளையர்க்கு உரிமையான கோரல் ஆலை யில் முதல்முறையாக நிகழ்ந்த வேலைநிறுத்தமும் வெள்ளை

யருக்கெதிரான வெறுப்புணர்வை வெளியிடும் துணிச்சலை அளித்தன.

அத்துடன் சுதேசி இயக்கம் செல்வாக்குப் பெற்ற இடமாகவும் தூத்துக்குடி விளங்கியது. அதன் விளைவாகவே இச்செயல்கள் நடந்துள்ளன.

**வெற்றி பெற்ற வேலைநிறுத்தம்**

இறுதியில் வேலைநிறுத்தம் வெற்றி பெற்றது. மார்ச் மாதம் ஆறாம் நாளன்று ஆலையின் தலைமை எழுத்தரான சுப்பிரமணிய பிள்ளை என்பவர்* வ.உ.சி.யைச் சந்தித்து, தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள ஆலையின் மேலாளர் ஆயத்தமாக உள்ளதாகத் தெரிவித்தார். வ.உ.சி. ஐம்பது தொழிலாளர்களுடன் சென்று ஆலையின் மேலாளரைச் சந்தித்தார். அன்று மாலை சுப்பிரமணிய பிள்ளை மீண்டும் வ. உ. சி.யைச் சந்தித்து ஊதியத்தை அதிகரிக்கவும் வேலை நேரத்தைக் குறைக்கவும் ஞாயிற்றுக் கிழமை விடுமுறை அளிக்கவும் ஆலை நிர்வாகம் ஒப்புக்கொண்டதாகத் தெரிவித்தார் (The Hindu, 7-3-1908, 9-3-1908).

வ. உ. சி.யும் தமது சுயசரிதையில் (1946: 69)

அவரவர் சம்பளத் தரைப்பங் கதிகமா
அவரவர்க் கதுமுதல் அளிப்ப தாகவும்
ஞாயிறும் மற்ற நாட்களில் வெளியே
போயிருந் தருந்தற்குப் போதிய நேரமும்,
விடுதி யாக விடுவ தாகவும்
நடுவில் அவசரம் நண்ணுறின் லீவு
கூலி யின்றிக் கொடுப்ப தாகவும்

தாம் சுப்பிரமணிய பிள்ளையிடம் நிபந்தனை வைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

---

* மில் ஆபீஸ் பிள்ளை என்றும் இவரை அழைப்பர்.

பிப்ரவரி 6இல் தூத்துக்குடிக் கடற்கரையில் உரையாற்றிய சுப்பிரமணிய சிவா தொழிலாளர்களின் வெற்றி குறித்து இவ்வாறு குறிப்பிட்டார் (T.N.A.: 1911)

> எனது நோக்கம் ஆணவத்தைக் குறைப்பதேயாகும். கூலிகள் ஒரு வாரம் சும்மா இருந்தார்கள். இப்பொழுது நல்ல கூலி பெறப்போகிறார்கள் 50% உயர்வு சுதேசியத்தினால் கிடைத்துள்ளது. நாம் வெள்ளையர்களை எதிர்த்து நின்று வெற்றி பெற்றுள்ளோம். இந்நாளானது எனக்கும் உங்களுக்கும் பெருமைக்குரிய நாளாகும்.

7-3-1908 நண்பகலில் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினார்கள் (The Hindu, 9-3-1908). ஒன்பது நாள்கள் தொடர்ச்சியாக நடந்து இறுதியில் வெற்றிகரமாக முடிந்த இவ்வேலைநிறுத்தத்தின் வெற்றி முழக்கம், இந்தியா முழுவதும் எதிரொலித்தது.

## தூத்துக்குடி வெற்றி (The Tuticorin Vi

புரட்சிகரப் பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்த அரவிந்தர் தமது 'வந்தேமாதரம்' இதழில் (13-3-1908) 'தூத்துக்குடி வெற்றி' என்ற தலைப்பில் ஒரு நீண்ட தலையங்கமே எழுதினார். வ.உ.சி. நிகழ்த்திய வேலை நிறுத்தம் குறித்த ஒரு விமர்சன உரையாக அது அமைந்துள்ளது. எனவே அதனை முழுமையாக மேற்கோள் காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

> ஓர் அமைதியான போராட்டம் வெற்றியடைய வேண்டுமெனில் ஒற்றுமை, தளரா உழைப்பு, முயற்சி, தெள்ளத் தெளிவான செயல்திறன் ஆகியன அப்போராட்டத்தின் ஆதார சக்திகளாக அமைய வேண்டும். தூத்துக்குடி கோரல் ஆலைத் தொழிலாளர் போராட்டத்தில் இவை அனைத்தும் இருந்ததால் போராட்டம் மாபெரும் வெற்றியில் முடிந்தது. தொழிலாளர் கோரிக்கைகள் அனைத்

தும் ஏற்கப்பட்டு, 'நிபந்தனையற்ற சரணாகதி' என்ற அவமானத்திற்கு ஆங்கில முதலாளித்துவம் ஆளாயிற்று. தேசிய உணர்வு அடைந்துள்ள இந்த வெற்றிக்கு முக்கியக் காரணம், போராட்டத்தின் வீரமிக்க தலைவர்களேயாம். நாடு இத்தலைவர்களைக் குறித்துப் பெருமை கொள்ளலாம். சிலமில் தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதற்காக, அவர்கள் வாழ்க்கைத் தரம் சற்றே மேம்பாடடைவதற்காக சிதம்பரம், பத்மனாபன், சிவா போன்ற தலைவர்கள் சிறை செல்லவும், நாடு கடத்தப்படுவதற்கும்கூடத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டார்கள் என்றால் அது இந்திய சமுதாயத்தில் கல்வி அறிவு பெற்ற வகுப்பாருக்கும் எளிய பாமரருக்கும் இடையே ஏற்பட்டுள்ள பிணைப்பையும் உறவையுமே காட்டுகிறது.

தூத்துக்குடிப் போராட்டமும் தென் ஆப்பிரிக்க ட்ரான்ஸ்வால் போராட்டமும் கற்பிக்கும் பாடத்தை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.[6] அத்துடன் அப்பாடத்தை அடிக்கடி நடைமுறைப்படுத்திக்கொள்ளவும் வேண்டும். அப்படிச் செய்வதாலேயே நம் பலத்தை வளர்த்துக்கொள்ள முடியும். இதற்கான வாய்ப்புகள் எதனையும் நாம் இழக்கக் கூடாது.

வங்காளத்தில் தொழிலாளர் போராட்டங்கள் பல நிகழ்ந்துள்ளன. ஆனால் அச்சுத் தொழிலாளர் வேலைநிறுத்தம்[7] நீங்கலாக வேறெந்தப் போராட்டமும் தொழிலாளருக்கு வெற்றி தேடித்தரவில்லை. போராட்டத்தை இயக்குவிப்பவர்களிடையே காணப்பட்ட ஒற்றுமையின்மை அல்லது பொதுமக்கள் ஆதரவு இல்லாமை அல்லது ஒரு சில தொழிலாளர் போராட்டக் கட்டுப்பாட்டை மீறிப் பயந்து பணிந்துவிடுதல், தயங்குதல், அரைகுறை

யான சலுகைகளால் திருப்தி அடைந்து அதனால் போராட்டத்தின் உறுதிக்கும் தெளிவுக்கும் உலை வைத்துவிடுதல், இப்படி ஏதோ ஒரு காரணத்தால் தொழிலாளர் போராட்டங்கள் தோல்வியே கண்டன. ஆனால் தூத்துக்குடித் தொழிலாளர் போராட்டம் மாறுபட்டது. தனித்த ஒரு தொழிலாளர் போராட்டம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு அது ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துவிட்டது. போராட்டத்தை இயக்குபவர்கள் ஒரே சிந்தனையோடு, ஒரே மனதோடு இயங்க வேண்டும்; ஒரே குரலில் பேச வேண்டும்.

தொழிலாளர் இயக்கத்தின் பலமெல்லாம் அதன் ஒருங்கிணைந்த குறிக்கோளில்தான் அடங்கியுள்ளது. தனிப்பட்டவர்களின் சுயலாப, சுய நிவாரணத் தூண்டுதல்கள் இந்த ஒருங்கிணைந்த குறிக்கோளை அழித்துவிடும். அதற்கு இடம் தரலாகாது. அதே சமயம் சமுதாயத்தில் படித்த பகுதியினர் தொழிலாளர் போராட்டங்களுக்குத் தயக்கமின்றி, உற்சாகத்தோடு தார்மீக, பொருளாதார ஆதரவு தரவேண்டும். இந்தியத் தொழிலாளருக்குக் கிடைக்கும் ஒவ்வொரு வெற்றியும் இந்திய நாட்டிற்குக் கிடைத்த வெற்றியாகவும், ஏற்படும் ஒவ்வொரு தோல்வியும் தேசிய இயக்கத்திற்கு ஏற்பட்ட தோல்வியாகவும் கொள்ளப்பட வேண்டும். தூத்துக்குடியில் நடந்த போராட்டம் ஒப்பற்ற திறமையோடும் வீரத்தோடும் நடத்தப் பட்டுள்ளது. மேலும் 'தேசிய' வேதவாக்கின் உட்பொருளான தார்மீகம் இப்போராட்டத்தில் நன்கு உணர்த்தப்பட்டுள்ளது. இவற்றிற்கான பெருமை எல்லாம் இப்போராட்டத்தை முன்னின்று நடத்திய தலைவர்களையே சாரும். கோரல் மில் தொழிலாளர்களின் துயரங்களும் அவர்களுக்கு இழைக்கப் பட்ட அநீதிகளும் பரந்த இந்திய நாட்டின் துயரங்

களே, இந்த நாட்டிற்கு இழைக்கப்பட்ட அநீதிகளே என்று இத்தலைவர்கள் உணர்த்தியுள்ளார்கள். நாட்டையும் வீட்டையும் வேறுபாடின்றிக் காணும் இவர்களது தேசியம் போற்றுதற்குரியது.

**வேலைநிறுத்தம் உணர்த்தும் செய்தி**

கோரல் மில் தொழிலாளர்கள் நிகழ்த்திய வேலை நிறுத்தத்தின் வெற்றி மிகப் பெரிய சாதனையாகும். அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளான ஞாயிறு விடுமுறை, தேவைப்படும்பொழுது ஊதியமில்லா விடுமுறை என்பன இன்று நமக்கு வியப்பை அளிக்கலாம். ஆனால் அன்றையச் சூழலில் இவை மிகப் பெரியச் சலுகையாகவே இருந்தன. ஒன்பது நாட்கள் தொடர்ச்சியாக வேலைநிறுத்தம் செய்ததன் வாயிலாக 50 சதவீத ஊதிய உயர்வை அவர்கள் பெற்றதும் ஒரு பெரும் சாதனை தான்.

இவ்வேலை நிறுத்தத்தின் விளைவாகத் தூத்துக்குடி நகரிலிருந்த பல்வேறு தொழிலாளர்களும் பயனடைந்தார்கள். தூத்துக்குடி நகரசபை, இரயில்வே கம்பெனி மற்றும் நகரிலிருந்த ஐரோப்பிய நிறுவனங்கள் ஆகியன, அவர்களிடம் பணியாற்றிய ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்தியதுடன் அவர்களை அன்பாக நடத்தத் தொடங்கின (The Hindu, 5-3-1908).

அத்துடன் இம்முதல் வேலைநிறுத்தத்தின் வெற்றி தூத்துக்குடி நகரில் இருந்த ஏனைய தொழிலாளர்களுக்கும் போராடும் உணர்ச்சியைத் தோற்றுவித்தது. பர்மா எண்ணெய்க் கம்பெனியில் இரண்டு ஊழியர்களை ஓர் ஆங்கிலோ-இந்தியன் அடித்துவிட்டதற்காக அந்நிறுவனத்தின் ஊழியர்கள் மார்ச் 8ஆம் நாள் (கோரல் மில் வேலைநிறுத்தம் முடிந்த மறுநாள்) வேலைநிறுத்தம் செய்தனர் (The Hindu, 9-3-1908).

மார்ச் 10இல் நகரசபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கேட்டு வேலைநிறுத்தம் செய்தனர். இவர்களைப் பின்பற்றி நகரசபையில் பணிபுரியாத

சுத்திகரிப்புத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் செய்தனர் (N.A.I.: 1908: 12).

எல்லாவற்றிற்கும் மேலாக, அரவிந்தர் தமது தலையங்கத்தில் குறிப்பிட்டது போல் படித்தவர்களுக்கும் சாதாரண ஆலைத் தொழிலாளர்களுக்குமிடையே ஒரு பிணைப்பு ஏற்பட்டது. 'மில் கூலிகள்' என்று இழிவாக அழைக்கப்பட்ட ஆலைத் தொழிலாளர்கள் சில உரிமைகளைப் பெற, தூத்துக்குடி நகரமே இப்போராட்டத்தில் ஈடுபட்டது என்று சொன்னால் அது மிகையாகாது. வழக்கறிஞர்கள், வணிகர்கள், சிறு வியாபாரிகள், குதிரை வண்டி ஓட்டுபவர்கள், கசாப்புக் கடைக்காரர்கள், பலகாரம் விற்பவர்கள், நாவிதர்கள், சலவைத் தொழிலாளிகள், நகரசுத்தித் தொழிலாளிகள், வெள்ளையரின் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளிகள் எனப் பல்வேறு தொழில் புரிவோரும் சுதேசி இயக்கம் என்ற அரசியல் இயக்கத்தில் கொண்ட ஈடுபாட்டின் விளைவாக, கோரல் மில் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு கொடுத்தனர்.

பொருளாதாரக் கோரிக்கைகளும் வேலை நேரம், வேலைப் பளு ஆகியவையுமே பெரும்பாலான தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளாக இன்று அமைந்துள்ளன. நாட்டின் பல்வேறு பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் போராட்டங்களுக்குத் தலைமையேற்று நடத்தவேண்டிய தொழிலாளி வர்க்கம், பொருளாதாரப் போராட்டம் என்ற குறுகிய வட்டத்திற்குள் மட்டும் இயங்கும்போது வரலாற்றில் அது வகிக்க வேண்டிய உயர் நிலையிலிருந்து தாழ்ந்துவிடுகிறது. ஆனால் வ.உ.சி., கோரல் மில் தொழிலாளர்களை 'சுதேசி இயக்கம்' என்ற அரசியல் இயக்கத்துடன் இணையும்படி செய்து வந்தேமாதரம் முழக்கமிட வைத்துள்ளார். பொருளாதாரக் கோரிக்கைகளை முன் வைத்துத் தொடங்கிய ஒரு வேலைநிறுத்தம், அரசியல் வேலைநிறுத்தமாக மாற்றப்பட்டது. அன்றையச் சூழலில் இது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

பொருளாதாரப் போராட்டம் அரசியல் போராட்டமாக மாற்றப்பட்டதால்தான் இப்போராட்டம் வெற்றி பெற்றது.

கோரல் மில் தொழிலாளர்கள் மட்டுமின்றி பிற நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களும் அரசியல் உணர்வு பெற்றவர்களாக விளங்கினர். மார்ச் 10ஆம் நாள் விபின்சந்திரபாலரின் விடுதலை நாளினைத் தடையை மீறி வ.உ.சி.யும் சிவாவும் நடத்தினர்.[8] இதில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படாததை எதிர்த்து பர்மா எண்ணெய் (பெட்ரோல்) நிறுவன ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர் (T.N.A.: 1908). வ.உ.சி., சிவா, பத்ம நாப ஐயங்கார் ஆகிய மூவரும் மார்ச் 12ஆம் நாள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து பெஸ்ட் அண்ட் கம்பெனி என்ற நிறுவனத்தின் ஊழியர்கள் மார்ச் 13ஆம் நாள் வேலைநிறுத்தம் செய்தனர். கசாப்புக் கடைக்காரர்களும் வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்டனர் (N A.I.: 1908:14). சுதேசி எதிர்ப்பாளர்கள்—அவர்கள் உள்ளூர்க்காரர்களாக இருந்தாலும்கூட, அவர்களுக்கு வண்டி ஓட்டக் குதிரை வண்டிக்காரர்கள் மறுத்தார்கள் N.A.I.: 1908: 12).

இதே ஆண்டில் (1908) ஜூலை மாதம் திலகருக்கு ஆறு ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.[9] தண்டனைக் காலமான ஆறு ஆண்டுகளுக்கு ஈடாக ஆறு நாட்கள் தொடர்ச்சியான அரசியல் பொது வேலை நிறுத்தம் நிகழ்த்தும்படி பம்பாய் நகர மக்களுக்குத் தீவிர வாதிகள் வேண்டுகோள் விடுத்தனர். இதற்கேற்ப ஜூலை 23ஆம் நாள் அரசியல் பொது வேலைநிறுத்தம் தொடங்கி ஆறு நாட்கள் வெற்றிகரமாக நடந்து முடிந்தது. தனிப் பட்ட முறையில் தங்களுக்கென ஒரு பொருளாதாரக் கோரிக்கை ஏதுமில்லாத ஓர் அரசியல் பொது வேலை நிறுத்தத்தில் பம்பாய்த் தொழிலாளி வர்க்கம் முழுமை யாகப் பங்கு கொண்டது

> இந்திய ஜனநாயகவாதியான திலகருக்கெதிராகப் பிரிட்டிஷ் ஒநாய்கள் விதித்த வெறுக்கத்தக்கதீர்ப்பு,

> ஒரு ஜனநாயகவாதிக்கெதிராக பணமூட்டைகளின் குற்றேவல்காரர்களால் தொடுக்கப்பட்ட இத் தாக்குதல், தெருக்களில் ஆர்ப்பாட்டங்களையும் பம்பாயில் வேலை நிறுத்தத்தையும் கிளப்பி விட்டுள்ளது. இந்தியாவிலும்கூடத் தொழிலாளி வர்க்கம் உணர்வுபூர்வமான அரசியல் வெகுஜனப் போராட்டத்திற்கு ஏற்கனவே வளர்ந்துவிட்டது. எனவே, இந்தியாவிலுள்ள ரஷ்ய மாதிரியான பிரிட்டிஷ் ஆட்சி அழிவது திண்ணம்

என்று பம்பாய்த் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் குறித்து 1908 ஆகஸ்ட் 5இல் லெனின் (1963: 45-46) எழுதினார்.

ஆனால் பம்பாய்த் தொழிலாளர்களின் அரசியல் பொது வேலைநிறுத்தத்திற்கு நான்கு மாதங்களுக்கு முன்னரே கோரல் மில் தொழிலாளர்கள் அரசியல் வேலை நிறுத்தம் செய்தனர் என்பது நாம் அறியவேண்டிய முக்கிய செய்தியாகும்.

வ.உ.சி.யும் சிவாவும் 1908 மார்ச் 12இல் நெல்லையில் கைதானதை ஒட்டி மார்ச் 13இல் தூத்துக்குடியில் மக்கள் எழுச்சி கொண்டெழுந்தனர். கடையடைப்புகளும் பிரம் மாண்டமான ஆர்ப்பாட்டங்களும் நிகழ்ந்தன. மார்ச் 7ஆம் நாள் வெற்றிகரமாக வேலைநிறுத்தத்தை முடித்துக் கொண்டு பணிக்குத் திரும்பிய கோரல் மில் தொழிலாளர் கள் மீண்டும் மார்ச் 14இல் வேலைநிறுத்தம் மேற் கொண்டு இம்மக்கள் எழுச்சியில் பங்கு கொண்டனர் (Reisner: 1966: 647).

இதனை, சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆங்கில நீதி பதிகளும் சுட்டிக் காட்டியுள்ளனர். வ.உ.சி.யும் சிவாவும் தங்களுக்கு செசன்சு நீதிபதி பின்ஹே (A. F. Binhey, I.C.S.) யால் விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் முறையீடு செய்தனர். அம் முறையீட்டைத் தலைமை நீதிபதி ஆர்னால்ட் ஒயிட்

(Arnold White), நீதிபதி மில்லர் (Justice Miller) என்ற இரு வெள்ளையர்கள் விசாரித்து, பின்ஹே விதித்த தண்டனையைக் குறைத்தனர். இத்தீர்ப்பில் இவ்விரு நீதிபதிகளும் கோரல் மில் வேலைநிறுத்தம் குறித்துச் சற்று விரிவாகவே ஆராய்ந்துள்ளனர் (T.N.A.: 1911). அதன் சாரம் வருமாறு:

> சாட்சிகளாக வைக்கப்பட்ட உரைகளில் சில கோரல் மில் வேலைநிறுத்தத்தைப் பற்றிப் பெரு மளவில் குறிப்பிடும் உண்மை எங்கள் பார்வையில் படாமலில்லை. 1908 பிப்ரவரி 23இல் நிகழ்த்திய உரையின் ஒரு பகுதி உண்மையிலேயே தொழி லாளர்களை வேலைநிறுத்தத்திற்குத் தூண்டுவ தாகவே அமைகிறது. உரைகளின் மற்றப் பகுதிகள் 'புறக்கணிப்பு' (பகிஷ்காரம்) பற்றிய கேள்வி களுக்குப் பதில் அளிப்பதாகவே விளங்குகின்றன. தொழிலாளர்களை வேலைநிறுத்தம் செய்யத் தூண்டுவதோ, அந்நியப் பொருட்களைப் புறக்கணிக்கச் சொல்வதோ—எவ்வளவு தவறான பாதையாக இருப்பினும்—குறும்புத்தனம் மிகுந் திருப்பினும்—அரச நிந்தனை இல்லை என்பதை இங்கு சொல்லத் தேவையில்லை. தங்களது கூலி குறித்தும் தாங்கள் நடத்தப்படும் முறை குறித்தும் தூத்துக்குடியிலுள்ள கீழ்த்தட்டு வர்க்கத்தினரின் அதிருப்தி கிளர்ந்தெழுவதற்கு, குற்றஞ்சாட்டப் பட்டவர்களின் உரைகள் காரணமாக இருந்தன என்ற அரசுத் தரப்பு சாட்சிகள் கூற்றிலுள்ள உண்மையினை நாங்கள் அறியாமலில்லை. இதை எந்தப் பகுத்தறிதலும் இன்றி எங்களால் மதிப்பிட முடிகிறது. ஏன் இதைத் திரும்பவும் சொல்கிறோம் என்றால், தொழிலாளர்கள் குறைந்த கூலி வாங்கிய தற்கும் தரக்குறைவாக நடத்தப்பட்டதற்கும் உண்மையான சான்றுகளும் இல்லை. உதாரண

மாக 1908இல் பிப்ரவரி மாதம் 27ஆம் நாள் முதல் முறையாக வேலைநிறுத்தம் செய்த தொழிலாளிகள் சிறிது அளவு கூலி உயர்வு பெற்று வேலைக்குத் திரும்பினர். பின் 1908 மார்ச் மாதம் 13ஆம் நாள், இரண்டாவது தடவையாக வேலைநிறுத்தம் செய்து மறுபடியும் பழைய கூலிக்கே வேலைக்குத் திரும்பினர். 1908 பிப்ரவரி 27ஆம் நாள் நடந்த வேலைநிறுத்தத்திற்கு முன், தொழிலாளர்கள் அதிருப்தி அடைந்திருந்ததாகத் தனக்கு எந்தப் புகாரும் வந்ததில்லை என்றும் தூத்துக்குடி கோரல் மில் தலைமைப் பொறுப்பிலிருந்த திரு ஆண்ரு ஹார்வி* (Andrew Harvey) தமது சாட்சியத்தில் கூறியுள்ளார். அவர்களுடைய குறைகளை அறிந்து வர ஆலையின் எழுத்தர்கள் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் கூறிய பதிலின் அடிப்படையில் கூலி உயர்த்தப்பட்டவுடன் 1908 மார்ச் 7ஆம் நாள் அவர்கள் வேலைக்குத் திரும்பி 13ஆம் நாள் வரை வேலை பார்த்து வந்தார்கள். (மார்ச் 13ஆம் நாள் தான் திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் கலகங்கள் தோன்றின). அன்றிலிருந்து அவர்கள் வேலையை விட்டுச் சென்றார்கள். மறுபடியும் மார்ச் 20ஆம் நாள் வேலைக்குத் திரும்பினார்கள். மார்ச் 7ஆம் நாள் உயர்த்தப்பட்ட கூலியைக்கூடக் கேட்காமல், அதற்கு முன் அவர்கள் வாங்கிய பழைய கூலியின் அடிப்படையில் முழு மன நிறைவுடன் வேலைக்கு வர அவர்கள் ஒத்துக்கொண்டார்கள்.

* ஆண்ரு ஹார்வி, முன்னர் குறிப்பிட்ட பிராங் ஹார்வியின் சகோதரர். பின்னர் கோரல் மில் இருவர் பெயராலும் எ அன்ட் எஃப் ஹார்வி மில்ஸ் என்ற பெயரில் அழைக்கப்பட்டது. இது தற்போது மதுரை கோட்ஸ் மில் என்ற பெயரில் இயங்கிவருகிறது.

சிவாவும், வ.உ.சி.யும் ஆற்றிய உரைகளின் காரணமாக, பொதுமக்களுடைய நடத்தையில் ஒரு தெளிவான மாறுதல் ஏற்பட்டதென்பதற்கு, சாட்சியம் இருந்தது. அச்சாட்சியத்தைப் புறக்கணிக்க எவ்விதமான காரணமுமில்லை. அத்துடன் வேலைநிறுத்தத்தின் விளைவாக மக்கள் மனதில் ஏற்பட்ட ஒரு கிளர்ச்சியின் காரணமாகவும் அவர்களுடைய நடத்தையில் மாறுதல் தோன்றியிருக்லாம் என்பதையும் நாங்கள் புரிந்துகொள்கிறோம்.

கோரல் மில் தொழிலாளர்கள் குறைந்த ஊதியம் பெற்றதற்கும் கொடுமைப்படுத்தப்பட்டதற்கும் சான்றுகள் இல்லையென்று வெள்ளை நீதிபதிகள் குறிப்பிடுவது அவர்களது வர்க்கப் பாசத்தையே புலப்படுத்துகிறது. ஆயினும் வேலைநிறுத்தத்தில் அரசியல் கலந்திருந்ததை நீதிபதிகள் இருவரும் சுட்டிக்காட்டியுள்ளமை கவனிக்கத்தக்கது.

கோரல் மில் வேலைநிறுத்தம் குறித்து இதுவரை அறிந்த செய்திகளையும் இத்தீர்ப்பில் காணப்படும் செய்திகளையும் அடிப்படையாகக் கொண்டு நாம் பின்வரும் உண்மைகளை உணர்கிறோம்:

1 பிப்ரவரி 27இல் தொடங்கிய வேலைநிறுத்தம் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு, வேலை நேரக் குறைப்பு, வார விடுமுறை ஆகியவற்றைக் கோரிக்கைகளாகக் கொண்டிருந்தது.

2 இக்கோரிக்கைகளில் வெற்றிபெற்ற தொழிலாளர்கள் மார்ச் 7இல் வேலைக்குத் திரும்பியுள்ளனர். அன்றிலிருந்து புதிய ஊதியம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

3 மார்ச் 7லிருந்து 13 வரை அவர்கள் புதிய ஊதியத்தில் பணிபுரிந்துள்ளனர்.

4 மார்ச் 14லிருந்து 19 வரை தொழிலாளர்கள் மீண்டும் வேலைநிறுத்தம் செய்துள்ளனர். இவ்வேலைநிறுத்தத்திற்கு அவர்களது தனிப்பட்ட கோரிக்கை எதுவும்

காரணமில்லை. தங்களது தலைவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தே அவர்கள் அரசியல் வேலைநிறுத்தம் செய்துள்ளனர்.

5 மார்ச் 20இல் அவர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பியபோது பழைய ஊதியமே (மார்ச் 7க்கு முன்னர் வாங்கிய ஊதியம்) வழங்கப்பட்டது. முதல் வேலைநிறுத்தத்தின் வாயிலாகப் பெறப்பட்ட ஊதிய உயர்வை அவர்கள் இழந்துள்ளனர்.

முதல் முறையாக நடத்திய வேலைநிறுத்தத்தில் கிடைத்த வெற்றி இவ்வாறு வெகுவிரைவில் பறிக்கப்பட்டு விட்டது. இதற்குக் காரணம் கோரல் மில் தொழிலாளர் கள் ஒரு முறையான தொழிற்சங்க அமைப்புக்குள் கொண்டு வரப்படாமையேயாகும். தொழிலாளர்களின் உள்ளக் குமுறல்களையும் பொதுமக்களின் சுதேசிய உணர்வையும் ஒருங்கிணைத்து வெற்றி கண்ட வ.உ.சி. யால் ஒரு முறையான தொழிற்சங்கத்தை உருவாக்க முடியவில்லை. இதற்கு முக்கிய காரணம் மார்ச் 12இல் வ.உ.சி. கைதானதும், அதனை அடுத்து நடந்த திருநெல்வேலிக் கலகமும், பின்னர் ஜூலை 7இல் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டதும் ஆகும்.

அத்துடன் வ.உ.சி. கைதானவுடன் நிகழ்ந்த பொது மக்களின் எழுச்சி கொடூரமாக அடக்கப்பட்டதாலும் பலர் கைது செய்யப்பட்டதாலும், தொழிற்சங்கம் என்ற அமைப்பினை உருவாக்க இயலாது போயிற்று.[10] என்றா லும் இந்தியாவின் வரலாற்றுப் புகழ்மிக்க வேலை நிறுத்தங்களில் ஒன்றாக இவ்வேலைநிறுத்தம் திகழ்கிறது.

## இந்தியாவில் நடந்த முதல் அரசியல் வேலைநிறுத்தம்

உணர்வுபூர்வமான — தொழிலாளர்களின் பொது அரசியல் வேலைநிறுத்தம் நிகழ்த்தியதில் பம்பாய் தொழி லாளர் வர்க்கத்திற்கு முன்னோடியாகத் தூத்துக்குடி நகரின் கோரல் மில் தொழிலாளர்களும் ஏனையத் தொழி

லாளர்களும் இருந்துள்ளனர் என்பது ஒரு முக்கிய வரலாற்றுண்மையாகும்.

என்ன காரணத்தாலோ பம்பாய் நகரத் தொழிலாளர்களின் அரசியல் பொது வேலைநிறுத்தத்தைக் (23 ஜூலை 1908 முதல் ஆறு நாள்கள் நடைபெற்றது) குறிப்பிடும் தொழிற்சங்கவாதிகளும் வரலாற்று ஆசிரியர்களும் தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளரின் வேலைநிறுத்தத்தைக் (வ.உ.சி., சிவா போன்ற தலைவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து 14 மார்ச்சு 1908 முதல் 19 மார்ச்சு 1908 வரை நடைபெற்ற அரசியல் வேலைநிறுத்தம்) குறிப்பிட மறந்துவிடுகின்றனர்.

அச்சம், அறியாமை, வறுமை ஆகியவற்றில் ஆழ்ந்து கிடந்த தொழிலாளர்களை, போராட்ட குணம் கொண்டவர்களாகவும் அரசியல் விழிப்புணர்வு பெற்றவர்களாகவும் வ.உ.சி. உருவாக்கினார். அவரது பணிகளில் தலையான பணியாக இது அமைகிறது.

**உண்மையான புகழாரம்**

இந்த வேலைநிறுத்தத்தை வ.உ.சி. நிகழ்த்தியதன் காரணமாக அவர்மீது கோரல் மில் நிர்வாகம் கொண்டிருந்த வெறுப்பு அவர் மறைந்த பின்பும் தொடர்ந்தது. ஏ அண்ட் எஃப் ஹார்வி மில் என்ற பெயரில் இந்நிறுவனம் இயங்க ஆரம்பித்த பின்னர் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி இதனை வெளிப்படுத்துகிறது. தூத்துக்குடி நகரில் வ.உ.சி.யின் பெயரால் கல்லூரி யொன்றை அமைக்கும் பணி விடுதலைக்குப்பின் 1950இல் தொடங்கியபொழுது அதற்காக நிதி திரட்டினார்கள். இந்நகரில் பல்வேறு அறப்பணிகளுக்கு நன்கொடை வழங்கி வந்த ஹார்வி மில் நிர்வாகத்திடமும் வ.உ.சி. கல்லூரிக்கு நிதி கேட்டபொழுது அவர்கள் கூறிய பதில் "வ.உ.சி.யின் பெயரால் அமையும் எந்த நிறுவனத்திற்கும் உதவி செய்வதில்லை" என்பதாகும்.[11] அவர்களது இந்த மறுப்புரையே வ.உ.சி.க்குக் கிடைத்த உண்மையான புகழாரமாகும்.

# குறிப்புகள்

"In December 1906 all District officers were asked to report on the progress of the swadeshi movement in the Madras Presidency. A note summarising their replies stated that it was entirely unsupported by the masses, and that matters had hardly got beyond the talking stage......There was, however, one exception: The following is a quotation from the note mentioned. "The only district from which any suspicion of anti-British feeling is reported is Tinnevelly district and there only in the town of Tuticorin." (N.A.I. 1908: 4)

2 இத்தகைய நிகழ்ச்சிகள் முப்பதுகளிலும்கூட நிகழ்ந்துள்ளன. இதனைச் சில நாட்டார் பாடல்களும் உணர்த்துகின்றன. எந்திரங்கள் நூல் நூற்கும் பொழுது நூலில் பஞ்சு திரட்சியாக சில வேளைகளில் ஒட்டிக் கொள்ளும். அவ்வாறு நிகழ்வதனை அண்டி விழுதல் என்று கூறுவார்கள். எந்திரத்துடன் எந்திரமாக மணிக்கணக்கில் நின்று கொண்டிருக்கும் தொழிலாளி ஒரு வினாடி கண்ணைத் திருப்பிவிட்டாலும் அண்டி விழுவதைத் தடுக்க முடியாதுபோய் விடும். சூசைமுத்து என்ற மேற்பார்வையாளன் இதற்காகத் தெங்கமலம் என்ற பெண் தொழிலாளியை அடிப்பதையும் அடிபொறுக்க முடியாது எதிரில் இருக்கும் கடற்கரைக்கு அப்பெண் தொழிலாளி ஓடிச்செல்வதையும் ஒரு நாட்டார் பாடல் இவ்வாறு சித்தரிக்கிறது:

அண்டி விழுகுதுண்ணு
அடிக்கிறானே சூசைமுத்து
அடி பொறுக்க முடியாமலே
ஓடுறானே தெங்கமலம் கடற்கரைக்கு

துரை (வெள்ளையன்) வருவதை எச்சரித்துத் தொழிலாளர் பாடிய பாடல் ஒன்று வருமாறு:

தொங்கலில் வாரான் தொரை
தள்ளிப்போ மூணுஅடி
கிட்டப்போனா எட்டி
உதைப்பான் மூணு நாளு

தொங்கலில்-தூரத்தில்
தொரை-துரை

(சிவசுப்பிரமணியன், ஆ., 'ஆலைத்தொழிலாளர்களின் நாட்டார் பாடல்கள்', தாமரை, நவம்பர் 1980)

3 வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டில் (March 7, 1908) 1000 என்று குறிப்பிடப்பட்டுள்ளது (Levkovsky: 1966: 457). சுதேசமித்திரன் 28-2-1908 இதழ் 500 பேர் கலந்து கொண்டதாகக் குறிப்பிடுகிறது. சென்னை சி.ஐ.டி. பிரிவினரால் தொகுக்கப்பட்ட 'Note on the Riots in Tinnevelly and Tuticorin in March 1908' என்ற அறிக்கையில் 27-2-1908இல் தொடங்கிய வேலைநிறுத்தத்தில் 200 தொழிலாளர்கள் கலந்துகொண்டதாகக் காணப்படுகிறது (N.A.I.: 1908: 8). இச்செய்திகளின் அடிப்படையில் வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துள்ளது என்று கருதுவது பொருந்தும். தொழிலாளர்கள் அதிக அளவில் கலந்துகொண்டதை வேலைநிறுத்தத்தின் வெற்றி உணர்த்துகிறது.

4 மாணிக்க ஆசாரியின் இச்செயல் குறித்து 5-3-1908இல் நிகழ்ந்த பொதுக்கூட்டத்தில் சிவா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் (T.N.A. 1911).

"Yesterday some maistries were taken inside the mill and threatened, but to no effect. During the last two or three days, I hear that some persons have been dragging young boys and the maistries have been preventing it...Manikka Asari of the British India Steam Navigation Company is said to collect boys and take them to the mill and the maistries complain of it. I don't know what may take place. I say today that if Manikka Asari drags the boys the maistries will interfere and I don't know if there will be a disturbance. If there is, I am not responsible and I inform the authorities of this fact in the presence of this public assembly. The Government authorities should assist the aggrieved party and not side with the offending party."

5 இந்நிகழ்ச்சியைச் சிலர் கற்பனை என்று கருதுகின்றனர். ஆனால் இது உண்மையில் நிகழ்ந்தது என்பதைப் பின்வரும் சான்றுகள் வாயிலாக உணரலாம்.

(அ) இந்நிகழ்ச்சியை வ.உ.சி.யும் பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளார். அரசு ஆவணத்தில் இடம்பெற்றுள்ள அவரது உரையின் ஆங்கில மொழிபெயர்ப்பு வருமாறு (T.N.A. 1911):

"I heard this morning that a vakil sent for a barber to have a shave. The barber asked him if he was not an anti-Swadeshi, the vakil called him a fool and the barber went away without shaving him."

ஆ) 'இந்து' இதழில் வெளிவந்த இச்செய்தியின் முழு வடிவம் வருமாறு (The Hindu, Madras, 5-3-1908):

### A BARBER REFUSED TO SHAVE

An extraordinary incident of boycott took place yesterday. Mr. Rangasamy Aiyangar, Vakil and nominated Municipal councillor, who supported the Collector's proposal to strengthen the local police force, sat before a barber for a shave. The barber had scarcely soaped his hair when he asked Mr. Rangasamy Aiyangar if he supported the Collector's proposal. The Aiyangar replied it was not his business. The barber said that it was, then, not his business to shave him and went away.

### A SORRY PREDICAMENT

The gentleman then sent for other barbers, but all refused. He presented a petition to Mr. Ashe, who declined to interfere. The jutkawalas and tiffin-supplier have refused to supply jutkas and tiffin to the same gentleman. He went to the sub-Collector's bungalow and prostrated before him for protection and police help. Of course he would not interfere.

6 தென்னாப்பிரிக்காவில் உள்ள ட்ரான்ஸ்வால் பகுதியில் ஆசியர்கள் நடமாட்டத்தைக் கட்டுப்புடுத்தும் சட்டம் ஒன்று தென்னாப்பிரிக்க வெள்ளை அரசால் 1906 ஆகஸ்ட் மாதத்தில் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி ட்ரான்ஸ்வால் நகரில் குடியிருக்கும் ஒவ்வொரு இந்திய ஆணும் பெண்ணும் எட்டு வயதுக்கும் மேற்பட்ட குழந்தைகளும் ஆசியவாசிகளின் பதிவாளரிடம் தங்கள் பெயரையும் அங்க அடையாளங்களையும் பதிவு செய்து அடையாள அட்டை ஒன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அடையாள அட்டையை எப்பொழுதும் கையில்

வைத்திருக்க வேண்டும். பொதுச் சாலையிலோ அல்லது வேறு எந்த இடத்திலோ எந்த அதிகாரி கேட்டாலும் அதனைக் காட்ட வேண்டும். அடையாள அட்டை இல்லாதவர்கள் அபராதம், சிறைத் தண்டனை, நாடு கடத்தப்படல் போன்ற தண்டனைகளுக்கு ஆளாவார்கள். இச்சட்டத்தை எதிர்த்து 1906 செப்டம்பரில் காந்தியடிகள் சத்தியா கிரகம் செய்து சிறை சென்றார். 1908 ஜனவரியில் சில சிறு சலுகைகள் தென்னாப்பிரிக்க அரசால் அறிவிக்கப் பட்டன. இப்போராட்டத்தையே 'ட்ரான்ஸ்வால் போராட்டம்' என்று அரவிந்தர் குறிப்பிடுகின்றார்.

7 கல்கத்தா நகரில் இயங்கி வந்த இந்திய அரசாங்கத்தின் அச்சகத் தொழிலாளர்களும் வங்காள அரசுச் செயலகத்தின் அச்சகத் தொழிலாளிகளும் இணைந்து 1905 செப்டம்பர் 27இல் வேலைநிறுத்தம் செய்தனர். நவம்பர் 10இல் வேலைநிறுத்தம் முடிவுற்றது. முழு வெற்றி என்று கூறமுடியாவிட்டாலும் தொழிலாளர்கள் ஓரளவிற்குத் தங்கள் கோரிக்கைகள் சிலவற்றை வென்றெடுத்தார்கள். வேலைநிறுத்தக் காலத்தில் தொழிலாளர்களுக்குப் பணம், அரிசி, உருளைக்கிழங்கு மற்றும் காய்கறிகளைப் பொதுமக்கள் அன்பளிப்பாக வழங்கினார்கள்.

8 விபின்சந்திரபாலர் வங்காளத்தின் விடுதலை வீரராவார். இவர் நடத்திய 'வந்தேமாதரம்' இதழில் வெளியான சில கட்டுரைகளை எழுதியது யார் என்று நீதிமன்றத்தில் கூற மறுத்துவிட்டார். இதனால் நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, ஆறு மாதச் சிறைத்தண்டனை இவருக்கு விதிக்கப் பட்டது. இவர் விடுதலையாவதாக எதிர்பார்க்கப் பட்ட மார்ச் 9ஆம் நாளை, சுயராஜ்ய நாளாக இந்தியா முழுமையும் கொண்டாட வேண்டும் எனத்

திட்டமிடப்பட்டது. இதனையொட்டி நெல்லையில் 9ஆம் நாளும் தூத்துக்குடியில் 10ஆம் நாளும் விபின் சந்திரபாலரின் விடுதலை கொண்டாடப்பட்டது.

9 தீவிரவாதத் தேசியத்தின் தலைவரான திலகர் தாம் நடத்திவந்த 'கேசரி' என்ற மராத்தி செய்தித்தாளில் 'நாட்டின் துரதிருஷ்டம்' (The Country's misfortune) என்ற கட்டுரையை வெளியிட்டார். இக்கட்டுரையை வெளியிட்டதன் வாயிலாக மாட்சிமை தாங்கிய மன்னருக்கெதிராக அதிருப்தியையும் வெறுப்புணர்வையும் தூண்டியதாகவும், மன்னரின் குடிகளுக்கிடையே பகையுணர்வைத் தூண்டியதாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இதன் அடிப்படையில் 1908 ஜூன் 24இல் பம்பாய் நகரில் கைது செய்யப்பட்டார். ஜூலை 13இல் வழக்கு விசாரணை தொடங்கியது. ஜூலை 22இல் ஆறு ஆண்டு நாடு கடத்தல் தண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது (பின்னர் மேல்முறையீட்டில் ஆறாண்டுச் சிறைவாசமாக மாற்றப் பட்டது). இவ்வழக்கு விசாரணையின்போது திலகர் அளித்த வாக்குமூலங்களும் உரைகளும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தனவாகும். நீதிமன்றத்தைத் தனது கருத்துக்களைப் பரப்பும் பிரச்சார மேடையாக அவர் மாற்றிவிட்டார்.

10 1937ஆம் ஆண்டில்தான் இந்தியத் தேசிய இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர்களால் 'மில் தொழிலாளர் சங்கம்' என்ற பெயரில் முதல் தொழிற்சங்கம் ஒன்று இவ்வாலையில் தொடங்கப்பட்டது.

11 வ.உ.சி. கல்லூரியின் நிறுவகச் செயலாளரான (Founder Secretary) அமரர் திரு. ஏ. பி. சி. வீரபாகு அவர்கள் குறிப்பிட்டது.

## துணைநூற் பட்டியல்

### (அ) நூல்கள்—ஆவணங்கள்

சிவசுப்பிரமணியன், ஆ., 1979-80, "வ.உ.சி. நடத்திய வேலை நிறுத்தம்," வ.உ.சிதம்பரம் கல்லூரி ஆண்டு மலர், தூத்துக்குடி.

மார்க்ஸ், (மொழிபெயர்ப்பு), 1971, இந்தியாவைப் பற்றி, நியூ செஞ்சுரி புத்தக நிலையம் பிரைவேட் லிமிடெட், சென்னை.

லெனின், வி. இ., (மொழிபெயர்ப்பு), 1963, "உலக அரசியலில் நெருப்பேறும் விஷயங்கள்," கிழக்கத்திய மக்களின் தேசிய விடுதலை இயக்கம், என்.சி.பி.எச். பிரைவேட் லிமிடெட், சென்னை.

வ.உ.சி., 1946, முல்லைப் பதிப்பகம், சென்னை-4.

Desai, A.R., 1954, *Social Background of Indian Nationalism*, Popular Book Depot, Lamington Road, Bombay-7.

Dyakov, A.M., 1964, "The Postwar Rise of the Anti-Imperialist Movement—India Achives Independence 1945-47," *A Contemporary History of India*, Editors V. V. Balabushevich, A.M. Dyakov, People's Publishing House, New Delhi.

Levkovsky, A.I., 1966, "Beginning of Mass Liberation Struggle (The Swadeshi Movement)," *Tilak and the Struggle for Indian Freedom*, Ed. I.M. Reisner and N. M. Goldberg., People's Publishing House, New Delhi.

N.A.I. (National Archives of India), 1908, Calcutta Records, Government of India, Home Department, Political-A., *History of the Disturbances in Tinnevelly and Tuticorin in March 1908*.

Narasimhan, V.K., 1963, *Kasturi Ranga Iyengar*, Publi tions Division, Government of India, New Delhi.

Pate, H.R., I.C.S., 1917, *Madras District Gazetteers, Tinnevelly, Vol.* 1, The Superintendent, Government Press, Madras.

Reisner, I.M.; 1966, "Social and Political Contribution of Balgangadhar Tilak," *Tilak and the Struggle for Indian Freedom*, Ed. I. M. Reisner and N. M. Goldberg, People's Publishing House, New Delhi.

Shanmugasamy, R., 1977, *National Movements in Madras Presidency with Special Reference to V. O. Chidambaram Pillai* (Unpublished M. Lit. Thesis), Department of Politics and Public Admi istration, University of Madras.

Sharma, 1971, *Labour Movement*
Publishers, New Delhi.

(Tamil Nadu State Archiv

| | |
|---|---|
| | G. O. No. 842-43 Judicial 18-6-1908. |
| 1908a | Newspaper report (confidential)-weekly, fortnightly and monthly for the year 1908. |
| 1911 | G. O. No. 1542 Judicial 3-10-1911. |
| 1920 | Under Secretary Safe No. 137-A(L). |
| 1923 | Under Secretary Safe No. 407. |

Venkatakrishnan, M., 1972, "V.O.C. and the Labour Movement," *V. O. Chidambaram Centenary Souvenir*, V.O.C. Centenary Committee, Tuticorin.

**(ஆ) இதழ்கள்**

*சுதேசமித்திரன்*, 1908.

Bande Mataram, 1908.

xvc:69

1908ஆம் ஆண்டு பிப்ரவரி 27இல் தூத்துக்குடி நகரிலிருந்த வெள்ளையரின் நூற்பாலையான கோரல் ஆலையில் வேலைநிறுத்தம் ஒன்றினை வ.உ.சி.யும் சிவாவும் தலைமையேற்று நடத்தினர். இவ்வேலைநிறுத்தம் குறித்தும் அதன் விளைவுகள் குறித்தும் தக்க வரலாற்றுச் சான்றுகளின் துணையுடன் இந்நூல் ஆராய்கிறது. மேலும் 1908 ஜூலையில் பம்பாய் நகரில் நடந்த அரசியல் பொது வேலைநிறுத்தத்திற்கு நான்கு மாதங்களுக்கு முன்னரே தமிழகத்தில் தூத்துக்குடியில் அரசியல் பொது வேலைநிறுத்தம் நடந்துள்ளதையும் இந்நூல் வெளிப்படுத்துகிறது. வரலாற்றை வரலாறாகப் படிக்க விரும்புவோர் படிக்க வேண்டிய நூல்: